முதன் முதலாக உலகில் நடந்த நிகழ்ச்சிகள்!

...சம் குறள்பித்தன்

676/93
1120
ந
492
195402

முதன் முதலாக
உலகில் நடந்த நிகழ்ச்சிகள்

பாபநாசம் குறள் பித்தன்

முருகன் பதிப்பகம்
33, சிங்கார முதலித்தெரு,
D. R. R. நகர்,
கரையான்சாவடி,
சென்னை-600 056

முதற்பதிப்பு : டிசம்பர் 1992

உரிமை : பதிப்பகத்திற்கு

ரூ. 14-00

15402

அச்சிட்டோர் :

குகன் பிரிண்டிங் ஒர்க்ஸ்
32, பெரியார்பாதை, சூளைமேடு
சென்னை-600 094.

தொகுத்தவனின் தொகுப்புரை

ஆறு ஆண்டுகளாக நான் படித்த நூல்களி லிருந்தும், நாள், வார, மாத இதழ்களிலிருந்தும் குறிப்பெடுத்து வந்த குறிப்புகளே இத்தொகுப்பு நூல்.

இந்தக் குறிப்பெடுக்கும், நல்ல கருத்துகளை தொகுத்து வைக்கும் பழக்கத்தை என்னுள் விதைத்த பெருமைக்கும் மதிப்பிற்கும் உரியவர் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தான்.

இந்த நூல் கண் விழிக்கும் வேளையில் அன்னா ருக்கு இந்நூலினைக் காணிக்கையாக்கி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தொகுப்பின் மூலப்பிரதியைப் பார்த்ததுமே மகிழ்ச்சியோடு எப்போதும் போல் ஏற்றுக் கொண்டு வெளியிட முன் வந்த முருகன் பதிப்பக உரிமை யாளருக்கும், இந்நூலின் முகப்பு ஓவியத்தை வரைந்த குமார் அவர்களுக்கும், பதினைந்து ஆண்டுகளாக எனது எழுத்துப் பணியில் இடையூறு ஏதும் ஏற்படா மல் பார்த்துக்கொண்டு வரும் என் அன்பிற்குரிய துணைவி நீலாகண்ணன் அவர்களுக்கும் என் நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

சென்னை-94 **'பித்தன்'**

பதிப்புரை

இன்றைய உலகத்தில் நிறைய விஷயங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் எல்லாருக்கும் உண்டாகியிருக்கிறது. இத்தகைய ஆவலைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற ஆவல் எங்களுக்கும் நீண்ட நாட்களாக உள்ளது. இதை நல்ல முறையில் பூர்த்தி செய்யும் வகையில் எழுத்தாளர் பாபநாசம் குறள்பித்தன் அவர்கள், தான் ஆறு ஆண்டுகளாகத் தொகுத்து வைத்த விஷயத்தைப் புத்தகமாக வெளியிட எங்களிடம் காண்பித்தார். அதைப் படித்துப் பார்க்கும் போது இந்த விஷயம் எல்லாருக்கும் குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாய் இருக்கும் என்று எங்களுக்குப் பட்டது. எனவே இதைப் புத்தகமாக வெளியிட முடிவு செய்து அதன்படிவெளியீட்டுள்ளோம். எனவே இதை அனைவரும் ஆதரித்து எங்களை ஊக்கப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்

முருகன் பதிப்பகம்.

முதன் முதலாக உலகில் நடந்த நிகழ்ச்சிகள்

☐ இந்தியாவில் முதன் முதலில் திரைப்படமாக்கப்பட்ட நாவல் 'பங்கிம் சந்திர சாட்டர்ஜியின் 'துர்கேஷ் நந்தினி' ஆகும். இந்நாவல் 1927இல் வங்க மொழியில் தயாரிக்கப்பட்டது.

☐ முதன்முதலில் இத்தாலியில் பெண்களுக்காக தயாரிக்கப்பட்டதுதான் ஸ்கூட்டர்.

☐ முதன்முதலில் விமானத் தபால் 1918 ஆகஸ்டு 12இல்தான் நியூயார்க் - வாசிங்டன் நகரங்களுக்கிடையே ஆரம்பமாகியது.

☐ 1974-ஆகஸ்டு 9-ல் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் சில அரசியல் குற்றச்சாட்டுகளின் காரணமாக முதன் முதலாக தன் பதவியை ராஜினாமா செய்தார். அமெரிக்க அரசியல் வரலாற்றில் இதுவே முதலானது.

☐ டாக்டர் மு. குமரேசன், கன்னியா குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். காது, மூக்கு,

தொண்டை அறுவை சிகிச்சையில் வல்லவர். இவர் அகில இந்திய ஈமெர்க் பரிசைப் பெற்ற முதல் மற்றும் ஒரே தமிழர்.

□ எஸ். பி. பாலசுப்ரமணியம் 'சாந்தி நிலையம்' என்ற திரைப்படத்தில்தான் முதன் முதலாகப் பாடினார். பாடல்: இயற்கையெனும் இளையகன்னி...

□ முஸ்லிம் நாட்டில் பிரதமராக பதவி வகித்த முதல் பெண்மணி பூட்டோவின் மகள் பெனாசீர்தான்.

உலக நாடுகளில் பிரதமர் பதவி வகித்த ஆறாவது பெண்ணரசி இவர். மேலும்,

பிரதமராகி பதவி வகித்தபோது ஒரு பெண் குழந்தை பெற்றது உலகத்திலேயே முதல் தடவையாகும். இவர் பெற்றது ஆண் ஒன்று பெண் ஒன்றாகும்.

□ தனியாக உலகை முதன் முதலாக சுற்றிவந்த மாலுமி ஜோஷுவா ஸ்லோகட்தான்.

ஒரு வேடிக்கை : இவருக்கு நீச்சலே தெரியாது. தனது முப்பத்தைந்தடி நீளப்படகில் பயணத்தைத் தொடர்ந்திருக்கிறார். 1895இல் பாஸ்டனில் புறப்பட்டு மூன்றாண்டுகள் கழித்து திரும்பி வந்திருக்கிறார். அப்போது வயது 51.

ஆள் அத்தோடு பயணத்திற்கு முழுக்குப் போட்டிருக்கக் கூடாதா? விதி யாரை விட்டது?

மீண்டும் 65-வயதில் அதே படகில் இரண்டாம் பயணத்தைத் தொடங்கி இருக்கிறார். போன ஆள் அவ்வளவுதான். இன்றுவரை திரும்பவில்லை!

☐ முதன் முதலில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய பெண் ஜப்பானைச் சேர்ந்த ஜங்கோடாலி என்பவ ராவார்.

☐ இங்கிலாந்தும் ஆஸ்திரேலியாவும் விளை யாடிய கிரிக்கெட் டெஸ்ட்டின் போதுதான் (1930) முதன் முதலாக வர்ணனை வானொலியில் தொடங்கப் பட்டது.

☐ வண்ணப்படங்கள் அச்சிட்ட தபால் கார்டு களை அமெரிக்காதான் முதன் முதலில் வெளியிட்டது. ஒன்று 50 சென்டிற்கு விற்கப்பட்டது.

☐ வானொலி நிலையம் முதன் முதலாக தோன் றியது இங்கிலாந்தில்தான். ஆண்டு-1920. இந்தியா வில் தோன்றியது 1926இல்.

☐ உலகிலேயே முதன் முதலாக அஞ்சல்தலை வெளியிட்ட நாடு இங்கிலாந்துதான்.

☐ இந்தியாவிலேயே முதன் முறையாக போக்கு வரத்து அவசர போலீஸுக்கு தனி தொலைபேசி சென்னை நகரில்தான் அமைக்கப்பட்டுள்ளது. இதற் காக ஒதுக்கப்பட்டுள்ள எண். 103.

☐ இந்தியாவின் முதல் பெண் பாரிஸ்டர் பம்பா யைச் சேர்ந்த மித்தன்டாடா என்பவரே.

☐ உலகின் முதல் புத்தகம் பைபிள். 1455ஆம் ஆண்டு ஜெர்மனியில் அச்சிடப்பட்டது.

☐ இந்தியாவில் முதன் முதலாக எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது அசாமில்தான். அங்கு 1867இல் நிலத்தின் அடியில் எண்ணெய்க் கிணறு இருப்பதைக் கண்டுபிடித்தார்கள்.

☐ பால்ய பிரார்த்தனைப் பாடலை முதன் முத லில் பாடியவர் ஏ. ஆ. கிருஷ்ணப்பிள்ளைதான்.

☐ இங்கிலாந்தில்தான் முதன் முதலில் கடற் சுரங்கங்கள் அமைத்து நிலக்கரியைத் தோண்டி எடுத் தனர்.

☐ பேப்பரை முதன் முதலில் பயன்படுத்திய வர்கள் எகிப்தியர் தான்.

☐ இந்தியாவிலேயே முதன்முதலாக 1930லேயே குடும்பநலம் குறித்த செய்தியை கவிதை வடிவிலே

'காதலுக்கு வழி வைத்துக்
கருப்பாதை சாத்த
கதவொன்று கண்டறிவோம்!' -என

எழுதியவர் பாவேந்தர் பாரதிதாசன்தான்:

☐ கம்யூனிசம் என்பதைப் பொதுவுடைமை என தமிழில் முதன் முதலில் கூறியவர் பாரதியார். அவ ருடைய 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்ற பாடலில் தான் இச் சொல்லைக் கையாண்டுள்ளார்.

☐ இந்தியாவில் முதன் முதலில் திரைப்படக் கல்லூரி 1946இல் சென்னையில்தான் ஆரம்பிக்கப் பட்டது.

☐ சாகித்திய அகடமி விருதுபெற்ற முதல் தமிழ் நூல் ரா. பி. சேதுப்பிள்ளை எழுதிய 'தமிழ் இன்பம்' என்பது. 1955இல் இந்த விருது வழங்கப்பட்டது.

☐ பாரதிய ஞான பீட விருது பெற்ற முதல் தமிழ் நூல் அகிலனின் 'சித்திரப் பாவை'. 1975இல் இந்த நூலுக்கு விருது கிடைத்தது.

☐ இலங்கையின் முதல் நாளிதழின் ஆசிரியர் கோ. நடேசய்யர். இவர் தஞ்சையைச் சேர்ந்தவர்.

1920ஆம் ஆண்டு அங்கு சென்ற இவர் 1921-ல் 'தேசநேசன்' என்ற இதழைத் தொடங்கினார்.

மேலும், 'தேசபக்தன், சுதந்திரன்' என்ற பெயரிலும் பத்திரிகைகள் நடத்தினார். மூன்றுமே நாளிதழ்கள்.

☐ எட்டி கால்வெர்ட் என்ற இங்கிலாந்து இசைக் கலைஞரது இசைத்தட்டுதான் முதன்முதலில் பத்து லட்சம் விற்பனையாகி 1954ஆம் ஆண்டு இசைத்தட்டு விற்பனையில் முதல் இடத்தைப் பெற்றது.

☐ துப்பாக்கி சுடும் உள் அரங்கம் ஒன்று சென்னையில் திறக்கப்பட்டிருக்கிறது. பத்து மீட்டர் தூரத்தில் உள்ள குறியை நோக்கிச் சுடும் நவீன

வசதிகள் உள்ள இந்த அரங்கம் இந்தியாவிலேயே இது தான் முதலாவது என்ற பெருமையை அடைகிறது.

☐ நிலவில் உள்ள குன்றுகளின் உயரங்களை முதன் முதலில் கண்டறிய முயற்சி செய்து வெற்றி கண்டவர் இத்தாலி நாட்டு விண்வெளி ஆராய்ச்சி யாளர் கலீலியோ.

☐ நிலவில் முதன் முதலில் காலடி எடுத்துவைத்த மனிதர் என்ற பெருமையைப் பெற்றவர் அமெரிக்க விண்வெளி வல்லுநர் நீல்ஆம்ஸ்ட்ராங் 1969ஆம் ஆண்டு ஜூன் 21ஆம் தேதி இச்சாதனையைப் புரிந்தார்.

☐ நிலவில் ஆய்வு நடத்திய முதல் மண்வள வல்லுநர் டாக்டர் ஹேரிசன் ஸ்மித் 1972ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் தேதி அப்பல்லோ 17 விண்கலத் திலிருந்து நிலவில் இறங்கினார்.

☐ இங்கிலாந்து நாட்டிலுள்ள புகழ்பெற்ற கால் பந்து மைதானம் 'விம்ளே'. இங்கிலாந்து அணியை முதன் முதலில் தோற்கடித்த அயல்நாட்டு அணி அங்கேரி. 1953ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் தேதி அவர்கள் வெற்றி பெற்றனர். அங்கேரி அணியிடம் மக்யார்ஸ் என்ற வீரர் வேகமாக ஆறு கோல்கள் போட்டு இங்கிலாந்து அணியைத் தோற்கச் செய் தார்.

☐ உலக அதிவேக மோட்டார் சைக்கிள் ஓட்டும் போட்டி முதன் முதலில் 936ஆம் ஆண்டு செப்டம்பர் 10ஆம் தேதி இங்கிலாந்து தலைநகர் லண்டனில்

நடைபெற்றது. 1968ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற இவ்வகைப் போட்டியில் ஆறு முறை வெற்றி பெற்று சாதனை புரிந்தவர் இவான் மாகர். இவர் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்.

☐ யுரேனஸ் கிரகத்தை முதன் முதலில் டெலஸ்கோப் மூலம் கண்டவர் வில்லியம் ஹெர்சல் என்ற இங்கிலாந்துக்காரர். 1781ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் தேதி இவர் அதைக் கண்டார்.

☐ 'இண்டியன் இங்க்' என்று சொல்லப்படும் மையை முதன் முதலில் கண்டுபிடித்து அறிமுகம் செய்தவர்கள் சீனர்கள்தான்.

☐ குறுக்கெழுத்து சமாச்சாரம் பத்திரிகையில் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட வருடம் 1875. நியூயார்க்கிலிருந்து வெளியான ஒரு பத்திரிகையில் சின்ன அளவில் குறுக்கெழுத்துப் போட்டி ஒன்று அச்சானது.

☐ முதன் முதலில் தேர்வு நடத்தியது எங்கே தெரியுமா? சீனாவில்தான். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இத்தேர்வு நடத்தப்பட்டது. சீன அரசுப் பணிக்காக இத்தேர்வு நடத்தப்பட்டதாம்.

☐ கிரிக்கெட் போட்டிகளுக்கான முதல் டெஸ்ட் மேட்ச் முதன் முதலாக 1877ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே மெல்போர்னில்தான் நடைபெற்றது.

☐ சர்க்கஸ் இப்போது எல்லா நாடுகளிலும் நடைபெறுகிறது. சர்க்கஸை முதன்முதலில் நடத்தியவர்கள் ரோமானியர்கள்தான். முறைபபடி சர்க்கஸ் ஆரம்பித்தவர் பிலிப் ஆஸ்ட்லி என்பவர். இவர் 1770ஆம் ஆண்டில் சர்க்கஸ் தொடங்கினார்.

☐ 1852-ம் ஆண்டு பம்பாய், கல்கத்தா, சென்னைப் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் முதன் முதலில் தொடங்கிய கல்கத்தா பல்கலைக் கழகம் தொடங்கிய நாள் ஜனவரி 24.

☐ முதன் முதலில் தேசிய கீதம் தோன்றியது ஜப்பானில்தான். உலகிலேயே இந்த தேசியகீதம்தான் மிகச் சிறியது. நான்கு வரிகள்தான்.

☐ இந்தியாவிலே முதன் முதலில் சென்னையில் தான் சிமெண்ட் தயாரிக்கப்பட்டது. ஆண்டு 1904.

☐ பத்து கிலோ மீட்டர் வேகத்திற்கு மேல் குறிப்பிட்ட இடங்களில் செல்லக்கூடாது எனச் சாலைகளில் ஸ்பீட் லிமிட் போர்டுகள் இருப்பதைப் பார்க்கிறோம்.

இந்த முறை பிரிட்டனில்தான் முதன் முதலில் 1865ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்படடது.

☐ 1901ஆம் ஆண்டு முதன் முதலாக நோபல் பரிசுகொடுக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. இது நார்வேயில்தான் தொடங்கப்பட்டது.

☐ முதன் முதலில் எழுதப்பட்ட பொருளாதார நூல் எது? நம்ம அர்த்தசாத்திரம்தான்!

☐ முதன் முதலில் அணுகுண்டைச் செய்தவர் ஆட்டோஹான் என்பவர்தான்.

☐ உலகில் முதல் சிறைச்சாலை 1403ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டது.

☐ இந்தியாவில் சோப்பு அறிமுகமான ஆண்டு 1850. முதல் சோப்பு தொழிற்சாலை 1889ல் உ.பி. மாநிலத்தில் உள்ள மீரட்டில் தொடங்கப்பட்டது.

☐ ஜேம்ஸ் ராம்ஸே என்பவர் 1786 ஆம் ஆண்டு முதன் முதலாக நீராவிப் படகைத் தயாரித்தார்.

☐ பிளான்ஷேர்ட் என்ற பிரெஞ்சுக்காரர்தான் முதன் முதலாக 1783இல் பாராசூட்டிலிருந்து குதித்த முதல் மனிதர். இந்த முயற்சியில் இவர் தமது கால்களையும் உடைத்துக் கொண்டார்.

☐ நாணயத்தில் தம் உருவத்தைப் பொறித்த முதல் அரசர் மகா அலெக்ஸாண்டர்தான். கி.மு. 330இல் தம் உருவம் பொறித்த நாணயங்களை முதலில் இவர்தான் தயாரித்து வெளியிட்டார்.

☐ உலகக் கால்பந்து கோப்பைப் போட்டி முதன் முதலில் 1930ஆம் ஆண்டுதான் பிரெஞ்சு நாட்டின் ஜூல்ரி மெட் என்பவரால் நிறுவப்பட்டது.

☐ உலகின் முதல் ஆங்கில நாவலான 'ராபின்சன் குருஸோ' எந்த முறையில் எழுதப்பட்டது தெரியுமா? சுயசரிதை முறையில். இந்த நாவலில்

எல்லாப் பாத்திரங்களும் அவரவரே கதை சொல்வார்கள். 17ஆம் நூற்றாண்டில் வெளிவந்த நாவல் இது.

☐ இராணுவத்தில் தொப்பி அணியும் முறை 17ஆம் நூற்றாண்டு முதல்தான் அறிமுகமானது.

☐ பிரெஞ்சு மன்னர்கள்தான் முதன் முதலில் 'விக்' அணியும் முறையை அறிமுகப்படுத்தினார்கள்.

☐ பார்லிமெண்ட் ஆட்சிமுறை தோன்றியது முதன் முதலில் பிரிட்டனில்தான். இதற்கு 1265இல் வித்திட்டவர் சைமன் டீ மாண்ட்போர்ட் என்பவர்.

☐ நினைவுத் தபால் தலைகளை அமெரிக்காவில் 1893 ஜனவரி 2ஆம் தேதி கொலம்பியா கண்காட்சியை ஒட்டி வெளியிடப்பட்டது.

☐ டி.வி.யில் முதன் முதலில் செய்திப்படம் வெளியானது 1953இல். அதில் லண்டனில் நடந்த இரண்டாம் எலிசபெத் ராணியின் முடிசூட்டு விழா சில மணி நேரம் காட்டப்பட்டது.

☐ இந்தியாவிலேயே-தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே முதன் முதலாக ஒரு பத்திரிகை ஆசிரியரைக் கூண்டில் ஏற்றப்பட்டது 'இது'தான். ஏற்றப்பட்ட நாள் 21-9-92. ஏற்றப்பட்டவர் முரசொலி செல்வம்.

☐ ரஸியா பேகம் என்ற பெண்ணரசிதான் டெல்லியை ஆண்ட முதல் பெண்மணி.

☐ தொடர்புக்கான தகவல் உலகில் முதல் செயற்கைக்கோள் அமெரிக்க விமானப் படையினரால் 1926இல் பயன்படுத்தப்பட்டது.

☐ சேலத்தில் முதன் முதலாக அமைக்கப்பட்ட சிலை அங்குள்ள கல்லூரி ஒன்றில் முதல்வராக இருந்த ஏ. இராமசாமி கவுண்டர் சிலைதான். அதை அமைக்க முன்நின்றவர் முன்னாள் அமைச்சர் க. இராசாராம்தான்.

☐ 1984இல்தான் முதன் முதலாக இந்தியப் பெண்கள் அணி முதன் முதலாக பளு தூக்கும் போட்டியில் கலந்து கொண்டார்கள்.

☐ சுதந்திர இந்தியாவின் முதல் நிதியமைச்சர் ஆர். கே. சண்முகம் செட்டியார்.

☐ தமிழ்நாட்டை ஆண்ட முதல் பெண் வேலு நாச்சியார்.

☐ 1818-ல்தான் முதன் முதலாக ஒரு மனிதனிடமிருந்து இன்னொரு மனிதனுக்கு ரத்தம் ஏற்றப்பட்டது.

☐ இந்தியாவில் இருந்து புறப்பட்ட கப்பல் எஸ். எஸ். லாயல்டி ஆகும். இது 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி பம்பாய் துறைமுகத்திலிருந்து இங்கிலாந்து நாட்டிற்குப் பயணமாகியது. இந்த நாளை இந்திய தேசிய கடல் சிறப்பு நாளாகக் கொண்டாடி வருகிறது.

☐ முதல் பயணிகள் கப்பல் எம். வி. அந்தமான்ஸ் ஆகும். இது இந்துஸ்தான் கப்பல் கட்டும் நிறுவனம் 1957ஆம் ஆண்டு விசாகப்பட்டினத்தில் தயாரிக்கப்பட்டது.

☐ இந்தியாவில் முதல் கப்பல் கம்பெனியைத் தொடங்கியவர் உ. உ. சிதம்பரம் பிள்ளையாவார். இவர் சுதேசி கப்பல் கம்பெனியை 1909ஆம் ஆண்டு தொடங்கினார்.

☐ கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் கிருத்துவர்கள் தான் தகவல் தொடர்புத்துறையில் அச்சு இயந்திரத்தை மிக முக்கியமான சாதனமாய் முதன் முதலாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்

☐ 1938-இல் வெளியான வனராஜகார்ஸன் படத்தில் நடிகை கே. ஆர். செல்லம் முதன் முதலாக நீச்சல் உடையில் தோன்றினார். அவ்வளவுதான். சரமாரியாக கண்டனங்கள் பத்திரிகைகளின் எதிர்ப்புகள் வந்தன.

கதை தெரியாமல் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டு விட்டேன். இனி இவ்வாறு நடிக்க மாட்டேன்' என்று அவர் அறிக்கை வெளியிட்டார். எதிர்ப்பு குறைந்தது.

☐ 1944இல்தான் முதன் முதலாக கண்வங்கி தோன்றுவிக்கப்பட்டது. தோற்றுவித்த நாடு நியூயார்க்.

☐ உலகின் முதன் நாளிதழான பாஸ்டன் நியூஸ் லெட்டர் என்ற பத்திரிகை கூட்டன் பர்க்கின் அச்சிடும் முறையைப் பின்பற்றியே 1704ஆம் ஆண்டு முதன் முதலாக வெளியிடப்பட்டது.

☐ சரியான எடையில், தரமான உணவுப் பொருள்களை சூப்பர் மார்க்கெட் மூலம் நியாயமான விலையில் விற்க வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்த நாடு அமெரிக்காதான். ஆண்டு 1916.

☐ உலகில் முதன் முதலாக வீடுகளுக்கு 'பைப்' மூலம் தண்ணீர் கொடுக்கும் முறை இங்கிலாந்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வகையில் 1233-ஆம் ஆண்டு பாடிங்டனிலிருந்து வெஸ்ட் மினிஸ்டர் பகுதிகள் வரை குழாய் மூலம் தண்ணீர் சப்ளை செய்வது ஆரம்பமானது.

☐ அணிசேரா இயக்கம் என்று அழைக்கப்படும் **NAM** முதன் முதலில் இந்தியாவில்தான் தோற்று விக்கப்பட்டது. ஆண்டு 1947. இதற்கு வித்திட்டவர் நேரு.

☐ 1890 ஆம் ஆண்டு கடைசியில் தான் ஜெர் மனியில் ஹெராயின் கண்டு பிடிக்கப்பட்டது. மயக்க மருந்தாகவே இது முதலில் கருதப்பட்டது. அபினைச் சாப்பிட்டுப் போதையில் மிதப்பவர்களைக் கட்டுப் படுத்த இது மிகவும் உதவும் என்று அக்காலத்தில் ஜெர்மானியர்கள் நம்பினார். ஆனால் இன்று அபினைவிட மோசமான ஒன்றாகிவிட்டது.

□ இந்தியாவில் சோப்பு அறிமுகமான ஆண்டு 1850.

□ முதலில் கடிகாரத்துக்கு ஒருமுள்தான் இருந்தது. முதன் முதலில் இரண்டு முள் உள்ள கடிகாரத்தை 1670இல் கண்டு பிடித்தார்கள்.

□ தாஸ்பிரகாஷ் ஓட்டலின் உரிமையாளர் கே. சீத்தாராம் ராவ்தான் முதன் முதலில் மசால் தோசையை தமிழகத்தில் அறிமுகப் படுத்தினார்.

□ ஆண்களுக்கான சட்டையை முதன் முதலில் கண்டு பிடித்தவர்கள் எகிப்தியர்கள். பெண்களுக்கான ஆடையை (ஜாக்கெட்டைக்) கண்டு பிடித்தவர்கள் ஆங்கிலர்கள். ஆண்கள், பெண்களுக்கான பேண்டைக் கண்டுபிடித்தவர்கள் சீனர்கள்.

□ முதன் முதலாக சர்க்கஸ் காட்சிகளுக்கு வழி காட்டியவர் பிலிப் ஆஸ்டலி என்னும் இங்கிலாந்து நாட்டவர். இவர்தான் 1770-ஆம் ஆண்டு சர்க்கஸ் காட்சிகளை முதலில் நடத்தியவர்.

□ முதல் சோப்பு தொழிற்சாலை 1889இல் உ.பி. மாநிலத்தில் உள்ள மீரட்டில்தான் தொடங்கப்பட்டது.

□ 1767-இல் நார்வே நாட்டில் முதன் முதலாகத் தொடங்கியதுதான் 'ஸ்கைடிங்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் பனிச்சறுக்கு விளையாட்டு. பனிச்

சறுக்கு விளையாட்டுச் சங்கம் சர்வதேச அளவில் 1924-இல் நிறுவப்பட்டது. ஐம்பது நாடுகள் வரையில் இதன் அங்கத்தினர்களாக உள்ளனர்.

☐ தபால் தலைகளை தெருக்களில் வைக்கும் பழக்கம் இங்கிலாந்தில் 1815 ஆம் ஆண்டில்தான் தொடங்கியது.

☐ முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை கொடுத்த நாடு நியூஸிலாந்து.

☐ பண்டிட் மதுசூதனன் குப்தா என்பவர் தான்இவரை இந்தியாவில் அறுவை சிகிச்சைக்கு முன்னோடியாக விளங்கியவர் எனக் கூறுவர்.

1896 ஆகஸ்ட் 16-இல் நுனியில் விளைந்த சிறு கத்தியில் மனித உடலில் அறுவை சிகிச்சை செய்த முதல் இந்திய மருத்துவர் இவர்தான்.

☐ முதன் முதலாக அனுப்பப்பட்ட தந்திச் செய்தி 'இறைவனின் படைப்பு என்னே!' என்பதே.

☐ உலகிலேயே முதன் முதலாக சங்கீதம் தொடர்பாக வெளிவந்த நூல் 'நயசாஸ்திரா' ஆகும். கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வெளி வந்த நயசாஸ்திராவில் சங்கீதம், இசைக் கருவிகள், அவற்றை இயக்கும் முறை குறிப்பிடப்பட்டிருந்தது.

☐ இந்தியாவிலேயே கர்நாடக மாநிலம் குல்பர்கா மாவட்டத்தில்தான் முதன் முதலில் ஒவ்வொரு விவசாயிக்கும் சொந்தமான நிலங்களின் ஆவணங்களை கம்யூப்ட்டர் மூலம் பதிவு செய்துள்ளார்கள்.

☐ பாரதியார் நடத்திய முதல் பத்திரிகை 'சக்ரவர்த்தினி' கடைசியாக நடத்தியது 'விஜயா'. தீவிர அரசியலை எழுதியது 'இந்தியா' பத்திரிகை. அவர் முதலில் எழுதியது 'தனிமை இரக்கம்' என்ற கவிதை தான். சுதேசமித்திரனில் வெளியான அவரது முதன் கவிதை 'வங்கமே வாழ்க' என்பதாகும்.

☐ அரசராக முடி சூட்டிக் கொள்ளாமலேயே இங்கிலாந்தை அரசாண்ட முதல் அரசியல் தலைவர் ஆலிவர் கிரெம்வெல். இவரது ஆட்சியில்தான், இங்கிலாந்து பல துறைகளில் முன்னேற்றம் அடைந்தது.

☐ அறுவை சிகிச்சையில் குளோரஃபாமை மயக்க மருந்தாக முதன்முதலாக பயன்படுத்தியவர் ஷேம்ஸ்யங் சிம்ஸன்.

☐ பால்பாயிண்ட் பேனாவைக் கண்டுபிடித்த முதல் மனிதர் ஜான்டவுட் என்பவர்.

☐ மராத்தான் ஓட்டம் - ஏதென்ஸில் 1896-ல் நவீன கால ஒலிம்பிக்சின் முதல்போட்டி கிரேக்க நாட்டின் தலை நகரான ஏதென்ஸில் நடை பெற்றது.

☐ ஆர்மோனிய இசைக் கருவியை முதன் முதலில் கண்டு பிடித்தவர்-

ஆடும் நாற்காலியை முதன் முதலில் கண்டு பிடித்தவர்-

மின்சார விளக்கை முதன் முதலில் கண்டு பிடித்தவர்-

அமெரிக்காவின் முதல் அயல் நாட்டுத் தூதுவராக இருந்தவர்-

முதல் கார்ட்டூனிஸ்ட் யார்?

முதன் முதலாக சர்குலேடிவ் நூலகத்தைத் தோற்றுவித்தவர்-

செய்திப் பத்திரிகைகளை முதன் முதலில் அஞ்சல் மூலம் மிகவும் குறைந்த செலவில் அனுப்பும் முறையை அறிமுகப்படுத்தியவர்-

மின்னலையும், மின்சாரத்தையும் ஆராய்ந்து அதன் நன்மைகளை முதன் முதலில் கண்டறிந்தவர்-

வியாபாரத்தில் விளம்பரத்தை முதன் முதலில் புகுத்தியவர்-

ஆங்கில உச்சரிப்பு முறையை முதன் முதலில் சீர்திருத்தம் செய்தவர்-

தீயணைப்புப் படையை முதன் முதலில் கண்டு அமைத்துக் கொடுத்தவர்-

அமெரிக்க குடியரசுக் கட்சியின் முதல் அமைப்பாளர்-

நவீன அஞ்சல்துறை அமைப்பதைத் தொடங்கியவர்-

பென்சில்லேனியா மாநிலத்தில் நான்கு முறை பதவி வகித்த முதலாமவர்-

- இவற்றிற்கெல்லாம் முதல் மனிராக இருந்தவர் பெஞ்சமின் பிராங்க்ளின்தான்.

☐ இந்தியாவில் 1957இல் தான் இந்திய காப்பிரைட் சட்டம் இயற்றப்பட்டது. அதன் கீழ் முதன் முதலாக பதிவு செய்யப்பட்ட நூல் ஜனாதிபதி இராஜேந்திர பிரசாத் எழுதிய சுய சரித்திரம் என்ற நூலேயாகும்.

☐ திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்ந்த எழுத்தாளர் ஜேன் ஆஸ்டின். அவரே இங்கிலாந்து நாட்டின் முதல் பெண் நாவலாசிரியர்.

☐ அழுக்குச் சட்டையோடும் கிழிந்து போன காலணியோடும் வகுப்பிற்குச் செல்ல வெட்கப்பட்டுக் கொண்டு வேதனையுற்ற மாணவராகப் படித்தவர் சாம்யுவல் ஜான்சன். 1775இல் ஆங்கில மொழியில் அவர் தொகுத்து வெளிவந்த அகராதியே அதிகாரப் பூர்வமான முதல் அகராதி என்ற சிறப்புக்குரியது.

☐ தமிழ் எழுத்தாளர்களில் முதன் முதலாக இராஜராஜன் விருது பெற்றவர் யோகி சுத்தானந்த பாரதியார். அவர் சிறந்த கவிஞர். எழுத்தாளர். மொழி பெயர்ப்பாளர். பல மொழிகளை அறிந்த அவர் மகான் அரவிந்தரிடம் புதுவையில் அவருடைய ஆசிரமத்தில் சீடராகப் பல ஆண்டுகள் இருந்தார்.

☐ சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக தமிழில் ஆராய்ச்சி செய்து பிஎச். டி. பட்டம் பெற்றவர் சுப்பிரமணிய சாஸ்திரி என்பவர். இவர் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரண்டு மொழிகளிலும் இலக்கண இலக்கியங்களுக்குள்ள தொடர்பினைக் குறித்து ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றார். இவர் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.

☐ எ. எஸ். சீனிவாச சாஸ்திரியைச் சிக்கா என்று அழைப்பார்கள். இவர் புகழ்பெற்ற புதுவை ஆனந்தரங்கம் பிள்ளை டைரியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். சென்னை நகரத்தின் சரித்திரத்தை முதன் முதலாக வெளியிட்டவர் இவரே. 'செஞ்சி நாயகர்கள்' என்ற வரலாற்று ஆராய்ச்சி நூலை எழுதிப் புகழ் பெற்றார்.

☐ 1901-ஆம் ஆண்டு இதாலி நாட்டில் ரோம் நகரில் பிறந்த என்ரிக்கோ ஃபெர்மி என்பவர்தான் முதன் முதலில் அணு உலையை உருவாக்கினார்.

☐ ஆறு தென் அமெரிக்க நாடுகள் சுதந்திரம் அடைவதற்குக் காரணமான மாபெருந்தலைவர்

சைமன் பொலிவர். கொலம்பியாவுக்கும் பெருவுக்கும் முதல் ஜனாதிபதியாக ஆனவர் இவரே!

□ முதன் முதலாக அறிவியல் கற்பனை நாவல்கள் எழுதியவர்கள் எச். ஜி. வெல்ஸ், ஜூலஸ் வர்னி (1828-1905) என்ற இருவருமே ஆவர்.

□ ரஷ்யாவை உலகிலேயே முதலாவது பொதுவுடைமை நாடாக மாற்றியவர் லெனின்.

□ சார்லஸ் அகஸ்டஸ் லின்ட்பர்க் (1902-1974) இவர் விமானம் ஓட்டுவதில் வல்லவர். அமெரிக்காவைச் சேர்ந்த இவர் தனியாக அட்லாண்டிக் பெருங்கடலை விமானம் மூலம் கடந்த முதல் மனிதர். ஸ்பிரிட் ஆஃப் செயின்ட்லூயிஸ் என்ற தனது ஒற்றை இஞ்சின் விமானம் மூலம் 1927-மே 20இல் நியூயார்க்கை விட்டுப் புறப்பட்டார். மறுநாள் பாரீஸை அடைந்தார். 5800 கி. மீ. தூரத்தை 33½ மணி நேரத்தில் இடைவிடாமல் பறந்து சாதனை புரிந்தார். அட்லாண்டிக் கடலின் குறுக்காகத் தென் அமெரிக்காவிற்கு விண்வெளிப்பாதை அமைப்பதற்கு பேருதவி புரிந்தவர் இவரே.

□ இந்தாலியில் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர் மார்க்கோனி. இவர்தான் வானொலியைக் கண்டு பிடித்தவர். இவர் 1901இல் அட்லாண்டிக் கடலைத் தாண்டி முதன் முதலாகச் செய்தியை அனுப்பினார்.

□ இந்தியாவின் ஆயர் சமுதாயத்தைப் பற்றி எழுதப்பட்ட முதல் சமூக - பொருளியல் ஆய்வு நூல்

'இந்தியாவின் ஆயர் சமுதாயம்' என்பதே. இதை எழுதியவர், டாக்டர். எஸ். எஸ். சஷி. இவர் உத்தரப் பிரதேசத்தில், ஹரித்வாருக்கு அருகில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவர்.

☐ அச்சுத் தட்டில் கதையைப் படைத்த முதல் எழுத்தாளர் மார்க்ட்வெயின். 'மிஸிஸிபி நதியில் வாழ்க்கை' என்னும் நூலை 1883இல் அச்சுத்தட்டு மூலமாகவே எழுதி முடித்தார்.

☐ ஜார்ஜ்வாஷிங்டன் 1789இல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் ஆனார். அமெரிக்கா பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்ததை எதிர்த்து 1779இல் சுதந்திரப்போர் தொடங்கியது. அமெரிக்க குடியேற்ற மக்களுக்கும் பிரிட்டிஷ் இராணுவப் படைக்கும் நடைபெற்ற போரில் அமெரிக்கா வெற்றி பெற்ற பின் முதல் ஜனாதிபதியாக ஆனவர் வாஷிங்டன்.

☐ நீராவி இயந்திரங்கள் செய்வதில் தன் வாழ் நாளைக் கழித்த ஸ்காட்டிஷ் இஞ்சினியர் உலை மூடியை நீராவி உந்தித் தள்ளுவதைப் பார்த்து, நீராவியை ஒரு சக்தியாகப் பயன்படுத்த முடியும் என்பதை முதன் முதலாகக் கண்டறிந்தவர் ஜேம்ஸ் வாட் (1736-1819)

☐ 1975 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் சாட்டலைட்டான ஆர்யபட்டா விண்வெளியில் விடப் பட்டது.

☐ முதன் முதலில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் 1962 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் அருகில் உள்ள தும்பா என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது. முதலில் மேற்கு கடற்கரையிலுள்ள தும்பாவிலிருந்து சிறிய ராக்கெட்டுகளை விண்வெளியில் ஏவப்பட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது.

☐ அச்சு முறையில் முதன் முதலில் எழுத்தைப் பதிய வைக்கும் முறையைக் கண்டு பிடித்தவர்கள் சுமேரியர்களாவர்.

☐ உலகில் முதன் முதலில் அணுகுண்டு வெடிப்புக்கு உள்ளான நாடு ஜப்பான். அமெரிக்கா, ஜப்பான் நகரமான ஹிரோசிமா மீது 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு 6 ஆம் தேதி காலை 8.16 மணிக்கு முதல் அணுகுண்டைப் போட்டது.

☐ குரங்கில் இருந்துதான் மனிதன் தோன்றினான் என்று முதன் முதலில் கண்டறிந்தவர் சார்லஸ் டார்வின்.

☐ பென்குவின் பறவைகளை முதன் முதலில் அண்டார்டிகா பகுதியில் பார்த்த அறிஞர் 'டுமான்ட்டி-உர்வில்லே, என்பவர்தான்.

☐ முதன் முதலில் இந்தியாவில் நிலவரியை ஒழித்த மாநிலம் ஹரியானா.

☐ முதன் முதலில் கால்சியத்தைக் கண்டு பிடித்தவர் ஹம்ப்ரிடேவி.

☐ முதலில் கண்டு பிடிக்கப்பட்ட ஆன்ட்டி பயாடிக் பெனிசிலின்.

☐ முதன் முதலில் பாட்டரியை உருவாக்கியவர் அலசாண்ட்ரோ வோல்டா.

☐ முதன் முதலில் முகச்சவரம் செய்து கொள்ளும் முறையைக் கண்டறிந்தவர் அலெக்சாண்டர்தான்.

☐ எவரெஸ்ட் சிகரத்தையடைந்த முதல் இந்தியப் பெண் பச்சேந்திரிபால்.

☐ முதன் முதலில் செஞ்சிலுவைச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் ஹென்றிடுரான்ட் என்பவர்.

☐ முதன் முதலில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலைக் கண்டு பிடித்தவர் ஹென்றி ப்ரியர்லி.

☐ பிரான்ஸ் மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட முதல் பெண்மணி மேடம் கியூரி என்பவர்.

☐ கால்சியத்தை முதலாவதாகக் கண்டறிந்தவர் சர் ஹம்ப்ரி டேவி.

ஜஹாங்கிர் அரசவைக்கு முதன் முதல் வந்த ஆங்கிலேயர் சர் தாமஸ் ரோ.

தக்காணத்தை வெற்றிகண்ட முதல் முஸ்லிம் அரசர் அலாவுதீன் கில்ஜி.

☐ தாவரங்களுக்கும் உயிருண்டு என்பதை முதன் முதலில் கண்டறிந்தவர் ஜே. சி. போஸ் என்பவராவார்.

☐ இந்தியா உப்பு உற்பத்தியில் வெகுவாக முன்னேறி தன்னிறைவு பெற்றதோடு 1951 ஆம் ஆண்டு முதல் அயல் நாடுகளுக்கு உப்பை ஏற்றுமதி செய்யத் தொடங்கியது.

☐ சந்திரனில் இறங்கிய முதல் மனிதன் ஆர்ம்ஸ்ட்ராங். விண் வெளியில் நடந்த முதல் மனிதன் எட்வர்ட் எச்எயிட். இவர் அமெரிக்க விண்வெளி வீரர். 1965ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் தேதி இவர் ராக்கெட்டை விட்டு வெளியே வந்து 21-நிமிடம் மிதந்தார்.

☐ முதன் முதலாக ஜனாதிபதி பதவி வகித்த பெண் அர்ஜென்டைனா நாட்டைச் சேர்ந்த இஸாபெல் பிரான் என்பவரே.

☐ 1919இல் பிரிட்டனில்தான் முதன் முதலாக விமானப் போக்குவரத்து தொடங்கியது.

☐ இங்கிலாந்தின் முதல் பிரதமர் ராபர்ட் வால்போல் என்பவர்தான்.

☐ நிலவில் இறங்கிய முதல் விண்வெளிக் கலத்தின் பெயர் லூனிக் II. இறங்கிய ஆண்டு 1959.

☐ உலகை முதன் முதலில் சுற்றி வந்த கப்பல் விக்டோரியா என்பதாகும்.

☐ 1977ஆம் ஆண்டில் இந்தியன் ஆட்டோ மொபைல் ரேசிங்கிளப் நடத்திய டூலேப் என்ற மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் கலந்து கொண்ட நிஷா சுதாரியா பம்பாயைச் சேர்ந்தவர். இப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார் இவர். முதல், மூன்றாம் பரிசுகளைப் பெற்றவர்கள் ஆண்களே! மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் 'கிராண்ட்ப்ரி' என்ற கடினமான போட்டியில் கலந்து கொண்ட முதல் இந்தியப் பெண்மணி இவரே!

☐ அகில இந்திய நட்சத்திரமாகப் புகழ் பெறுவதே கடினமாக இருக்கும்போது ஓர் இந்திய நடிகை ஹாலிவுட் நகரில் அமெரிக்கப் படங்களில் நடித்து உலகப் புகழ் பெற்றுவரும் சினேக் குப்தா முதன் முதலில் நடித்த படம் 'அரேஞ்டு மாரேஜ்' என்பதாகும். இது இங்கிலாந்தில் தயாரானது.

☐ இந்தியாவில் முதன் முதலில் பெண்களைப் படிக்க அனுமதித்த மருத்துவக் கல்லூரி சென்னை மருத்துவக் கல்லூரியே. ஆண்டு 1875.

☐ மிக்கி மவுஸ் கார்டூன் படங்களில் மிக்கிக்காக முதலில் குரல் கொடுத்தவர் அதை உருவாக்கிய வால்ட் டிஸ்னிதான்.

☐ குறைந்த வயதில் இந்தியாவின் பிரதமராக முதன் முதலில் பதவியேற்றவர் ராஜீவ்காந்திதான். 1984 அக்டோபர் 31இல் பதவியேற்றபோது அவருக்கு வயது 40தான்.

☐ உலகில் முதன் முதலில் அஞ்சல் அட்டையைப் பயன்படுத்தும் கருத்தை வெளியிட்டவர் அமெரிக்காவைச் சேர்ந்த சார்லட்டன் என்பவர். ஆண்டு 1861.

☐ மொழி வாரியாக அமைக்கப்பட்ட முதல் மாநிலம் ஆந்திரம்.

☐ ஆங்கிலக் கால்வாயை முதலில் நீந்திக் கடந்த இந்தியர் மிஹிர் சென்.

☐ ரிக்ஷாவை முதலில் கண்டு பிடித்தவர்கள் ஜப்பானியர்களே!

☐ பெங்களூரைச் சேர்ந்த முப்பது வயதான சி. என். ஜானகி என்பவரின் இரண்டு கால்களும் வலது முழங்கையும் போலியோ நோயால் செயலற்றுப் போய்விட்டன. இந்த நிலையில் இவர் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து (நீந்தித்தான்) ஊனத்தோடு இக்கால்வாயைக் கடந்த முதல் பெண்மணி என்ற சிறப்பைப் பெற்றார்.

☐ ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் பெற்ற முதல் முஸ்லிம் பெண் ஹஸிபா பௌமர்காதான். இவர் அல்ஜீரியாவைச் சேர்ந்தவர். பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியில் 1500 மீட்டர் ஓட்டத்தில்தான் அவர் இந்த முதல் சாதனையைச் செய்தார்.

☐ பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெரும் கோடீஸ்வரி மேடம் க்ளாரா. இவர் தனது சொத்துகளை

எல்லாம் இந்த ஜென்மத்துக்காரர்கள் அனுபவிக்கக் கூடாது என நினைத்து விட்டாரோ என்னவோ, அதனால் தனது உயிலில் அனைத்து சொத்துகளுக்கும் ஒரே வாரிசு முதன் முதலாக செவ்வாய் கிரகத்திலிருந்து வந்து பூமியில் காலடி பதிக்கும் மனிதனுக்குத் தான்' என்று எழுதி வைத்துவிட்டு போய் சேர்ந்து விட்டார்!

☐ ஷேர்ஷா ஆட்சியில்தான் முதன் முதல் ரூபாய் வெளி வந்தது.

☐ கள்ளுக் கடைகளின் முன் முதன் முதலில் மறியல் செய்த பெண்கள் பெரியார் ஈ. வெ. ரா. வின் முதல் மனைவி நாகம்மையும், அவரது சகோதரி கண்ணம்மாவும்தான்.

☐ முதல் தேசியப் பத்திரிகையை நடத்தியவர் மண்டயம் சகோதரர்கள். ஆசிரியர் பாரதியார்.

☐ காந்தி ஆசிரமத்தை முதலில் ஏற்படுத்தியவர் ப. ஜீவானந்தம். சிறுவயல் என்ற கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டது.

☐ இந்திய நாட்டில் முதல் கவர்னர் பதவியை வகித்த பெண் சரோஜினி நாயுடு.

☐ வாத்திய இசைக் கலைஞர்களுக்கு இந்திய அரசு இதுவரை 'பத்மஸ்ரீ' விருதுதான் வழங்கியுள்ளது. இந்திய அரசின் 'பத்மபூஷன்' விருது பெறும் முதலா

வது கலைஞர் ஹரிபிரசாத் சௌரசியா. இவர் புல்லாங் குழல் இசைப்பதில் சிறந்தவர்.

☐ பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கிய முதல் நாடு இங்கிலாந்து. வழங்கிய ஆண்டு 1928.

☐ முதல் ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி 1884இல் வெளியிடப்பட்டது. இதற்கான உழைப்பு இருபது ஆண்டுகள்.

☐ Hurry, Lonely - இந்த ஆங்கில வார்த்தை களை முதன் முதலில் பயன்படுத்தியவர் நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர்தான்.

☐ ரோஜாப் பூவிலிருந்து முதன் முதலில் பன்னீர் எடுக்கும் முறையைக் கண்டு பிடித்தவர் - தாஜ்மகால் உருவாகக் காரணமாக இருந்த நூர்ஜகானின் தாயார் சாலிமாதான்.

☐ பால்பாயிண்ட் பேனாக்களுக்கான தர நியமம் 1966இல் முதன் முதலாக உருவாக்கப்பட்டு 1980-ஆம் ஆண்டு மீண்டும் திருத்தியமைக்கப் பட்டது.

☐ ஆரம்பக் காலத்தில் மலேரியாவை உண்டு பண்ணும் கிருமி எதுவெனத் தெரியாமல் இருந்தது. 1880-ஆம் ஆண்டில் லாவரான் எனும் பிரெஞ்சு ராணுவ மருத்துவர்தான் முதன் முதலில் மலேரியா ஒட்டுண்ணிகளால் உண்டாகிறது என்பதை அறிந்து சொன்னார். அதற்கு அவரே ‘பிளாஸ்மோடியம்’ எனப் பெயரிட்டு அழைத்தார்.

☐ இந்தியாவில் முதன் முதலாக சிங்கத்தையும் புலியையும் இணை சேர வைத்து அவற்றுக்குப் பிறந்த குட்டிக்கு 'டைஹான்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். 'டைஹான்' என்ற இந்தப் புதிய சொல்லை ஆங்கில அகராதியிலும் தற்போது சேர்த்துள்ளார்கள்.

☐ ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் இந்தியப் பெண் ஆரத்தி சாஹா.

☐ பெண்கள் முதன் முதலில் ஒலிம்பிக்கில் பங்கு பெற்ற ஆண்டு 1912.

☐ சோதனைக் குழாய் மூலம் குழந்தையை உருவாக்கும் முறையை முதன் முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் பேட்ரிக் ஸ்டெப்டோ, ராபர்ட் எட்வர்ட்ஸ் என்ற இங்கிலாந்து நாட்டு மகப்பேறு மருத்துவ வல்லுநர்கள் ஆவர்.

☐ முதன் முதலில் சோதனைக் குழாய்க் குழந்தையைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவர் திருமதி லெஸ்லி பிரௌன் ஆவார்.

☐ விந்து வங்கியை முதன் முதலில் உருவாக்கிய பெருமை ராபர்ட் கிரகாம் என்பவரைச் சேரும். இவர் 1980-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கலிஃபோர்னியாவில் விந்து வங்கியைத் தொடங்கினார்.

☐ முதல் பாதாள ரயில்வே கல்கத்தாவில் தொடங்கியது.

☐ நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் ரவீந்திர நாத் தாகூர்.

☐ இந்தியக் கடலோரத்தில் முதலில் வந்து குடியேறியவர்கள் போர்ச்சுகீசியர்.

☐ ஸ்தல ஸ்தாபன அமைப்பை முதலில் ஏற் படுத்திய வைஸ்ராய் மேயோ.

☐ ராக்கெட்டில் பறந்த முதல் பெண் வாலென் டினா தரஸ்கோவா. இவர் 1963-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16-ஆம் தேதி பறந்தார். விண்வெளியில் இவர் மூன்று நாள்கள் இருந்தார்.

☐ வானவெளியில் முதலில் பறந்தவர்கள் ரஷியர்கள்தான். பறந்தவர் பெயர் யூரிகாகரின். அவர் 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் 12-ஆம் தேதி வான ளியில் பூமியைச் சுற்றி வந்தார்.

☐ வானவெளியில் ஐந்து நாள் தங்கி பூமியைச் சுற்றிவந்த முதல் பெண்ணும் ரஷியாவைச் சேர்ந்தவர் தான். பெயர் வாலண்டினா தரஸ்கோவா.

☐ தொலை நோக்கிக் கருவியை முதன் முதலில் கண்டறிந்தவர் கலீலியோ. இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். 1609 ஆம் ஆண்டு தொலைநோக்கி யைக் கண்டுபிடித்து வானவெளியை ஆராய்ச்சி நடத்தினார்.

☐ வினா-விடை என்ற 'இண்டர்வியூ' முறையை ஆங்கிலேயர் அறிமுகப்படுத்தினர். அதனை 'நேர்

காணல்' என்னும் தனித் தமிழ்ச் சொல்லால் முதன் முதல் குறிப்பிட்டவர் வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளார்தான்.

☐ முதல் 'நேர்காணல்' என்பது காசிபண்டாரத் துக்கும்-கிருத்துவப் பாதிரியார் ஒருவருக்கும் 1857 இல் நடைபெற்ற உரையாடலாகும்.

☐ பத்திரிகை உலகைப் பொறுத்தவரை வட இந்தியரான பாபுராவ் பட்டேல் 'பிலிம் இந்தியா' என்னும் தமது இதழில் முதன் முதல் - கேள்வி பதில் பகுதியைத் தொடங்கினார்.

☐ கவிதையிலே வார ஏட்டை முதன் முதலில் நடத்தியவர் உவமைக் கவிஞர் சுரதா. இவர்தான் முதன் முதலில் 'கவிஞர் பெருமன்றம்' என்ற அமைப்பையும் தோற்றுவித்தவர். இவர் கவிதை ஏட்டைத் தோற்றுவித்த ஆண்டு 1955. இதழின் பெயர் 'காவியம்'. சினிமா வசனத்தைப் புத்தகமாகப் போடும் வழக்கத்தை முதன் முதலாக மங்கையர்க் கரசி' மூலம் ஆரம்பித்து வைத்தவரும் இவர்தான். தண்ணீரில் படகில் மிதந்த படியே பாட்டரங்கத்தை முதலில் நடத்திய பாவலரேறும் இவர்தான்.

☐ முதன் முதலாக 1931 இல் வெளியான 'காளிதாஸ்' படத்திற்குப் பாட்டெழுதியவர்கள் இருவர். ஒருவர் டி. வி. நடராஜாச்சாரி. மற்றொருவர் பாஸ்கரதாஸ்.

☐ முதன் முதலாகச் சினிமாவுக்குப் பாட்டெழுதிய பெண்மணி இயக்குநர், கே. சுப்பிரமணியத்தின் துணைவியாகிய மீனாட்சி சுப்பிரமணியம். இவருக்குப் பட்டம்மாள் என்ற பெயரும் உண்டு. கணவர் இயக்கித் தயாரித்த 'கீதகாந்தி' படத்தில்தான் 1949 ஆம் ஆண்டு இவர் எழுதினார்.

☐ ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குச் செல்லும் மோட்டார் பந்தயம், முதன் முதலாக 1906 ஆம் ஆண்டு ஜூன் 26 இல் ஆரம்பமானது. அர்ஜென்டினாவைச் சார்ந்த ஜீவான் மேனுவல் பிராங்க்கியோதான் மோட்டார் போட்டி வீரர்களிலேயே முதன் முதலாக உலகப் புகழ் பெற்றவர்.

☐ 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகில் முதன் முதலாக மருத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர் அமெரிக்காவைச் சேர்ந்த பிளாக்வெல் என்னும் அம்மையாரே.

☐ சடுகுடு விளையாட்டில் புதிய விதிமுறையை முதன் முறையாக 1918 ஆம் ஆண்டு சதாரா எனும் இடத்தில் அரங்கேற்றி வைத்தனர். அதன் பயனாகச் சடுகுடு விளையாட்டு 'கபாடி' என்ற பெயருடன் அகில இந்திய ஆட்டமாக மலர்ந்தது. இதன் பயனாக 1955 ஆம் ஆண்டு கல்கத்தாவில் முதன் முதலாக தேசிய அளவில் போட்டிகள் நடத்தப்பட்டன.

☐ கி. மு. 100 இல் உரோமப் பேரரசில் நீர்ச் சக்கரங்கள் முதன் முதலாக பயன்படுத்தப்பட்டன.

□ 1311 இல் தமிழ் நாட்டின் மீது டில்லி இசுலாமிய அரசு முதல் படையெடுப்பை நிகழ்த்தியது. படையை நடத்தி வந்தவன் மாலிக்காபூர்.

□ பால்சன் என்ற டென்மார்க்காரர்தான் ஒலிப் பதிவு நாடாவை 1890 இல் கண்டு பிடித்தார்.

□ அமெரிக்கரான எடிசன் முதன் முதல் 1877 இல் இசைத்தட்டைக் கண்டு பிடித்தார்.

□ 1823 இல் பாட்பாஜி என்ற இங்கிலாந்துக் காரர் முதல் கணிப்பொறியைக் கண்டு பிடித்தார்.

□ தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை காந்தி, நேரு, ஜெயப்பிரகாசர் போன்றோர் போல அவரே எழுதவில்லை. பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை சாமி சிதம்பரனார் அவர்கள் எழுதினார், 'தமிழர் தலைவர்' என்ற பெயரில்.

□ முதன் முதலில் ஒலிம்பிக் பந்தயங்களில், தங்கப்பதக்கம் பெற்ற பெருமையை உடையவள் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் வீராங் கனை ஷிர்லே கூப்பர்.

□ கிரிக்கெட் ஆட்டத்திற்கு முதன் முதலில் விதி முறைகள் வகுக்கப்பட்டது 1744ஆம் ஆண்டில்தான்.

□ கூட்டுறவு பண்டகசாலை (கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ்) 1844 ஆம் ஆண்டு வில்லியம் கூப்பர் என்பவரால் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டது.

□ சேஃப்டி பின்னை முதன் முதலில் கண்டு பிடித்தவர் வால்டர் ஹண்ட் என்பவர்தான். இவர் நியூயார்க்கில் பிறந்தவர். கண்டு பிடித்த ஆண்டு 1849.

□ கரும்பையும் அதன் பயனையும் பற்றி பிற நாட்டவர் நம்மிடமிருந்து தான் தெரிந்து கொண்டார்கள். ஐரோப்பியர்களுக்கு முதன் முதலில் கரும்பை அறிமுகப்படுத்தியவர் கிரேக்க வீரர், மகா அலெச்சாந்தர்தான். பாரதத்தை வெற்றி கொண்டு தாயகம் திரும்பிய அலெக்சாந்தர் அவர்களின் வீரர்கள் 'கீழை நாட்டின் இனிக்கும் கரும்புகள்' என்று இந்தியாவிலிருந்து கொண்டு போன கரும்புகளைக் காட்டினார்கள்.

□ காந்தத்தைப் பற்றி முதன் முதலாக அறிந்தவர்கள் சீனர்கள்தான்.

□ பார்வையற்றோருக்கு வழித் துணையாக அல்ஷேசன் நாய்களை முதன் முதலில் ஜெர்மனியில் தான் பழக்கினார்கள்.

□ உலகில் முதன் முதலாகவேலை நிறுத்தம் கிரேக்கத்தில்தான் நடந்தது. ஆண்டு கி. மு. 309. கிரேக்க நாட்டில் ஜுபிடர் தேவதை கோயிலில் ஒரு இசைக்குழு இருந்தது. அந்தக் குழுவினரை கோயில் நிர்வாகம் கோயிலில் உணவு உண்ணக்கூடாது என்று அனுமதி மறுத்து விட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தது இசைக்குழு.

இதற்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் நிர்வாகம் பணிந்தது. போராட்டம் வெற்றி பெற்றது.

□ மகாராஜா பரம்பரையில் முதன் முதலாக சினிமாவிற்கு கதை வசனம் எழுதியவர் எட்டயபுரம் மகாராஜாவின் தம்பிதான். படம்: தயாளன்.

□ நடிகர்களுள் முதன் முதலாகப் பாடல் எழுதியவர் எம். ஆர். சுவாமிநாதன்தான். படம்: சகுந்தலை.

□ படத்தில் கதாநாயகனாக நடித்துக்கொண்டே பாட்டு எழுதியவர் பி. டி. வி. கிருஷ்ணன். படத்தின் பெயர் கபீர்தாஸ். வெளிவந்த ஆண்டு: 1936.

□ சீனாவில்தான் முதன் முதலாக வாண வேடிக்கைகள் ஆரம்பித்தன.

□ உலகில் முதன் முதலாகக் கொடியைத் தேசிய சின்னமாக ஏற்றுக்கொண்ட நாடு டென்மார்க். அது கி.பி. 1218இல் தனது தேசியக் கொடியை அறிவித்தது.

□ உலகில் முதன் முதலாகத் திட்டமிட்டு தலை நகரை அமைத்தது அமெரிக்காதான். ஆண்டு 1800.

□ உலகில் முதல் சோதனைக் குழாய் குழந்தை 1978ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் தேதி இங்கிலாந்தில் பிறந்தது.

□ வார்த்தைகளுக்கு இடையே இடைவெளி விட்டும், வரிகளுக்கு இடையே இடைவெளியிட்டும்,

காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி முதலியவற்றையும் கிரேக்கர்கள்தான் முதலில் பயன்படுத்தினர். இன்று நாம் பயன்படுத்தும் கேள்விக் குறியையும், புள்ளி முறைகளையும் 1515ஆம் ஆண்டு இத்தாலியரான ஆல்ரூஸ் மனுஷியஸ் அமைத்தார்.

☐ தமிழ்நாட்டில் ஆஸ்தானக் கவிஞர்களாக இருந்தவர்கள் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையும், கண்ணதாசனும், புலமைப்பித்தனையும் நாம் அறிவோம். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக எட்டயபுரம் சமஸ்தானத்தில் 1941இல் ஆஸ்தானக் கவிஞராக இருநத 'மகாராஜ வாத்தியார்' என்பவர் பி. யு. சின்னப்பா நடித்த 'தயாளன்' என்ற படத்திற்கு முதன் முதலாகப் பாட்டு எழுதியுள்ளார்.

☐ 62 பாடல்களைக் கொண்ட முதல் படம் 1934இல் வெளிவந்த 'நல்லதங்காள்' படம்தான்.

☐ திரைப்படப் பாடலாசிரியராக இருந்து முதல் அரசவைக் கவிஞராக ஆனவர் கண்ணதாசன்தான். உடல்நிலை காரணமாக சிகிச்சைக்காக வெளிநாடு (அமெரிக்கா) சென்ற முதல் கவிஞரும் இவர்தான்.

☐ தான் கட்டிய வீட்டிற்கு முதன் முதலில் 'தமிழகம்' என்று பெயரிட்டவர், வெள்ளைச்சாமி என்ற பெயரை பாஸ்கரதாஸ் என்று மாற்றிக்கொண்ட பாடலாசிரியர்தான்.

☐ ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, கை குலுக்கி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளும்

பழக்கம் முதன் முதலில் எகிப்து நாட்டில்தான் தோன்றியது.

☐ கிறிஸ்துமஸ் தினத்தன்று கிறித்தவர்களின் வீடுகளில் நடப்படும் கிறிஸ்துமஸ் மரம் நடும் பழக்கத்தை 1840இல் தோற்றுவித்தவர் இளவரசர் ஆல்பர்ட் என்பவர்.

☐ உலகின் முதல் மோட்டார் பந்தயம் 21 கார்களுடன் 1894ஆம் ஆண்டு ஜூன் மாதம் பாரிஸிலிருந்து ரூவன் வரை நடைபெற்றது.

☐ முதன் முதலில் உலகப் படத்தை வரைந்தவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்த இராடோஸ்தானிஸ்தான்.

☐ சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வராக நியமிக்கப்பட்ட முதல் இந்தியர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியாரே! இவர் ஆற்காட்டைச் சேர்ந்தவர்.

☐ உலகிலேயே பெண் எழுத்தாளர்களில் அதிக நாவல் எழுதிய பெருமைக்கு உரியவர் வை. மு. கோதை நாயகி அம்மாள்தான். அவர் எழுதிய நாவல்களின் எண்ணிக்கை - 115 ஆகும். நகைச்சுவையோடு பேசிக் கொண்டே எழுதும் ஆற்றல் பெற்றவர். 38 வயதில் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

☐ முட்டையை முதன் முதலாக உணவுப் பொருளாகப் பயன்படுத்தியவர்கள் எகிப்தியர்களே!

☐ பதின் மூன்றாம் லூயி முட்டைகளைக் கொண்டு நூறுவகை உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் ஆற்றல் மிக்கவனாம்.

☐ திரைப்படப் பாடல்களின் முதல் வரியை வைத்து படமாக்குவது இப்போது ஏற்பட்ட ஒன்றல்ல. இந்தப் பழக்கம் 1955-ல் பத்மநாப ஐயர் உடுமலை நாராயண கவியின் பாடலான 'எல்லாம் இன்ப மயம்' என்ற பாட்டின் முதல் வரியை வைத்தே அந்தக் காலத்தில் முதன் முதலாகப் படம் எடுத்தனர்.

☐ முதன் முதலாக மனோகராவில்தான் திரைக் கதை - வசனம் கலைஞர் மு. கருணாநிதி என்று பெயர் போடப்பட்டது.

☐ முதன் முதலாக கே. பாலசந்தர் போட்ட நாடகத்தின் பெயர் 'சினிமா விசிறி,

☐ தமிழகத்தில் முதன் முதலாக பாகவதர் நடித்த ஹரிதாஸ் படம்தான் ஒரே அரங்கில் மூன்று வருடம் ஓடிய படம். இதை முறியடிக்க இதுவரை எந்தப் படத்தாலும் முடியவில்லை!

☐ 201 - குழந்தை எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய குழந்தை எழுத்தாளர் - யார் - எவர்? என்ற நூலை 1961 இல் சங்கம் வெளியிட்டது. அதுவே முதல் முதலாகத் தமிழ் எழுத்தாளர்களைப் பற்றி வெளிவந்த விவரத் தொகுப்பு நூல் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொகுத்தவர் சங்க முயற்சிகளுக்கெல்லாம் பெருந்துணை புரிந்து வந்த

வரும், பல குழந்தை நூல்களின் ஆசிரியருமாகிய அமரர் ரத்தினம் ஆவார்.

□ இங்கிலாந்தில் சேட்லியர் என்ற சீமாட்டிக்குத் தான் உலகில் (1546ஆம் ஆண்டு) மணமுறிவு முதன் முதலாக வழங்கப்பட்டது.

□ 1937 ஆம் ஆண்டிலேயே முதன் முதலாக சத்துணவுத் திட்டம் பற்றிய கருத்தினைத் திரைப் படத்தில் எழுதிய கவிஞர் அம்பாசமுத்திரம் ஏ. ரத்தின சபாபதி என்பவ தான்.

□ ஒரே நடிகர் இருவேடம் ஏற்று, அவருடன் அவரே சண்டை போடும் இரட்டை வேடக் காட்சியை முதன் முதன் முதலில் 1940 இல் புகுத்திய பெருமை டபிள்யூ ஆர். சுப்பராவுக்கே சேரும்.

□ 'சேவாசதனம்' படத்தில் முதன் முதலாக எம். எஸ். சுப்புலட்சுமியை அறிமுகம் செய்து வைத்த வர் இயக்குநர் கே. சுப்ரமணியம்.

□ எம். கே. ராதா, டி. எஸ். பாலையா, எம். ஜி. ஆர்., எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு, என். எஸ். கே. - இவர்கள் அனைவரும் முதன் முதலாக இணைந்து நடித்த முதல் படம் 'சதி லீலா வதி'.

□ பௌதிக நிபுணர் 'ஹெல்ம் ஹால்டஸ்' என்பவர் முதன் முதலில் கண்ணிற்குள்ளே ஏற்படும்

அமைப்புக் கேடுகளைக் காண்பதற்கென்றே ஓர் அரிய கருவியை 19 ஆம் நூற்றாண்டிலேயே கண்டு பிடித்தார்.

□ 1824 இல் நடந்த கிட்டூர்ச் சென்னம்மாளின் போராட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஜான்சிராணி லட்சுமிபாய்க்கு ஒரு தலைமுறைக்கு முன்பாகவே, கிட்டூர் ராணி சென்னம்மா, ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக ஆயுத மேந்திப் போராடி இந்தியாவிலேயே முதல் புரட்சியாளராக விளங்கினார்.

□ சிறந்த பட இயக்குநர் என்று பாராட்டப் பட்டு 1951-ஆம் ஆண்டிலேயே சீனாவிற்குச் சென்றவர் கே. ஏ. அப்பாஸ். அதேபோல் திரை உலகிலிருந்து முதன் முதலாக சோவியத் யூனியனுக்குச் சென்றவரும் எழுத்தாளர் அப்பாஸ்தான்.

□ 1987 பொங்கல் திருநாளன்று 'தமிழ் நாட்டுச் சடுகுடுப் பாடல்களும், சடுகுடு ஆட்டமும், என்று எழுதிய ஆய்வு நூலிற்கு முதன் முதலாக டாக்டர். நவராஜ் செல்லையாவிற்கு தமிழ் வளர்ச்சிக் கழகம் பரிசு வழங்கி உள்ளது. இத்துறையில் இது முதல் ஆய்வு நூல்.

இவரைப் பற்றி மேலும் ஒரு செய்தி: விளையாட்டுத் துறைக்கென்று 5000 புதிய தமிழ் வார்த்தைகள் கொண்ட ஆங்கில தமிழ் அகராதி ஒன்றினை முதன் முதலாக வெளியிட்டிருக்கிறார்.

☐ கி. மு. ஐந்தாவது நூற்றாண்டில் பாரசீக மன்னரான சைரஸ் என்பவர்தான் முதன் முதலில் நாய்களுக்குப் போர்ப் பயிற்சி அளித்தார். ஆசியா மைனரில் லடியா என்னும் நாட்டின் மீது அவர் தொடுத்த போரிலே மொலாசிரியா இனத்தைச் சேர்ந்த வேட்டை நாய்களைப் பயன்படுத்தினார். அந்த மூர்க்கமான நாய்கள் அவருக்குப் போரில் வெற்றியைத் தேடித்தந்தன.

☐ மனிதன் முதல் முதலாகப் பயன்படுத்திய சாயம் அவுரிச்சாயமே. சாயங்களின் முடிசூடா மன்னன் என்று இன்றும் புகழப்படும் இச்சாயம் இந்தியாவில்தான் 6000 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்திலிருந்தது. இங்கிருந்துதான் இது எகிப்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவியது.

☐ சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்புதான் முதன் முதலில் காஸ் விளக்கு கண்டுபிடிக்கப் பட்டது. இதனைக் கண்டு பிடித்தவர் ஆஸ்திரியாவைச் சேர்ந்த கார்ல் அயுர் என்பவர்.

☐ வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் சேர்ந்த இந்தியர்கள் என்று அழைக்கப்பட்ட பூர்விக மக்களே முதன் முதலாகப் புகையிலையைச் சாகுபடி செய்தனர். அந்த மக்கள் தமது பல விழாக்களில் புகையிலையை உபயோகித்தனர். 'அமைதிக்காகப் புகை குடித்தல்' என்னும் விழாவில் அவர்கள் புகையிலையைப் பயன்படுத்தினர். 16 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் தான் ஐரோப்பாவிற்கு குறிப்

பாக, இங்கிலாந்து, பிரான்ஸ், போர்ச்சுகல், ஸ்பெயின் முதலிய நாடுகளுக்குப் பரவியது.

☐ அமெரிக்காவில் முதலில் 9ஆம் நூற்றாண்டிலேயே மாயன், சாபொடெக் இனத்தவர்களிடையே மொஸைக் தொழில் நுணுக்கம் தெரிந்திருக்கிறது. ஆனால், முழு வளர்ச்சி பெற்றது அஸ்டெக் இனத்தவர் காலத்தில்தான்.

☐ வைட்டமின்கள் இருப்பதை முதலில் விஞ்ஞான முறையில் மெய்ப்பித்தவர் சர்பிரேடரின் கல்லாந்து ஹாப்கின்ஸ் என்பவரே.

1912 இல் இவர் இந்தச் சாதனையைப் புரிந்தார். பாலில் வைட்டமின்கள் அடங்கியிருப்பதை அவர் நேருக்கு நேர் தனது சோதனைகள் மூலம் நிரூபித்துக் காண்பித்தார்.

☐ நீராவியால் இயக்கப்படும் முதலாவது படகை ஜாக்குவஸ் பெரியர் என்னும் பிரெஞ்சுக்காரர் 1755 ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் உள்ள ஸீன் ஆற்றில் வெள்ளோட்டத்திற்கு விட்டுச் சோதனை நடத்தினார்.

☐ தண்ணீருக்கு அடியில் பிரயாணம் செய்வதற்கு ஒரு கப்பலைக் கட்டவேண்டும் என்ற எண்ணம் மனிதனுக்கு நீண்ட காலத்திற்கு முன்பே ஏற்பட்டு விட்டது.

உண்மையில் 1620 இல் டச்சுக்காரர் முதலாவது 'சப்மரினை' லண்டனில் அமைத்தார். மரத்தால்

செய்யப்பட்ட அதன் மீது கிரீஸ் தடவப்பட்ட தோல் இணைக்கப்பட்டது. 12 சுக்கான்கள் அமைக்கப் பட்டன.

□ மருத்துவத்தைப் பற்றி முதலில் வந்த நூல் 'சுசுருதசம்ஹிதை' என்பதாகும்.

□ விலங்குகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றோ அல்லது வேறு எந்தக் காரணத் திற்காகவோ தனது நாட்டிலுள்ள எல்லாவகை விலங் கினங்களையும் ஒன்றிணைத்து ஒரு காட்சி சாலையே அமைத்தானாம் கி. மு. 12 ஆம் நூற்றாண்டில் சீனாவை ஆண்ட வென் எனும் 'அரசன். இதுவே உலகிலேயே முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட மிருகக் காட்சி சாலை என்றும் சொல்லப்படுகிறது.

□ தெர்மா மீட்டரில் முதலில் தண்ணீரையும் பின்னர் ஆல்கஹாலையும் பயன்படுத்தி வந்தனர்.

□ முதன் முதலில் தெர்மா மீட்டரில் பாதரசத் தைப் பயன்படுத்த ஆரம்பித்தவர் அம்மாண்டன் என்ற பிரெஞ்சு விஞ்ஞானிதான்.

□ 14 ஆம் நூற்றாண்டில்தான் ஐரோப்பியர்கள் முதன் முதலாக வெடிமருந்துகளைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

□ இன்றைக்கு வடிவமைப்புப் பெற்றுள்ள தீக்குச்சி 1681 இல் தொடங்கி பல வடிவமும், மாறு தலும் பெற்று-அதன் விளைவாகப் பாதுகாப்பான தீக்

குச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த வகையைச் சேர்ந்த தீக்குச்சிகள் முதன் முதலாக சுவீடன் நாட்டில் 1844இல் உற்பத்தி செய்யப்பட்டன.

☐ முதன்முதலில் இந்தியாவில் 1774ஆம் வருடம் ரேணிகஞ்சில்தான் நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டது.

☐ ஜாண்லவ்ட் என்னும் ஓர் அமெரிக்கரின் மூளையிலேதான் முதன் முதலாக 1888ஆம் ஆண்டு பேனாவைப் பற்றிய சிந்தனை தோன்றிற்று. ஆனால், எல். ஜே. பிரோ என்பவரே 1935இல் முதன் முதலாக பால்பாயிண்ட் பேனாக்களை உற்பத்தி செய்து விற்பனைக்குக் கொண்டு வந்தார்.

☐ சட்டமன்ற உறுப்பினராகவும், சென்னை நகரசபையில் நாற்பது ஆண்டு காலம் உறுப்பினராகவும், சென்னை நகராட்சியின் முதல் இந்தியத் தலைவராகவும் இருந்தவர் வெள்ளுடை வேந்தர் என்று அழைக்கப்பட்ட தியாகராயர். இவர் தலைவராக இருந்தபோதுதான் சென்னை நகராட்சிப் பள்ளிகளில் பிள்ளைகளுக்கு முதன் முதலாக இலவச மதிய உணவு வழங்கினார். இவரது சிலை சென்னை மாநகராட்சி கட்டடத்தில் இப்போதும் இருக்கிறது.

☐ முதலாவது ஆசிய விளையாட்டுகள் புதுடில்லியில் நடந்தது.

☐ இந்தியாவில் முதல் அணுகுண்டு சோதனை 1974 மே 18ஆம் தேதி நடந்தது.

☐ பாராசூட் மூலம் குதித்த முதல் இந்தியப் பெண் காப்டன் சந்திரா.

☐ நோபல் பரிசு 1901ஆம் ஆண்டு முதல்தான் வழங்கப்படுகிறது.

☐ சீனாவிற்குச் சென்ற முதல் ஐரோப்பியர் மார்க்கோபோலா.

☐ கிரிக்கெட் டெஸ்ட்டில் முதன் முதல் இந்தியா பங்கேற்றது 1932 ஜூன் 25இல்தான்.

☐ ஒரு நாட்டிற்குப் பிரதமரான முதல் பெண்மணி சிரிமாவோ பண்டாரநாயகா.

☐ அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் திலீப்சிங் சாண்ட். ஆண்டு 1958.

☐ இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்.

☐ பொதுத் துறையில் தொடங்கப்பட்ட முதல் தொழிற்சாலை இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ். இடமும், ஆண்டும்: பெங்களூர் 1948.

☐ அணிசேரா நாடுகளின் முதல் உச்சகட்டக் கூட்டம் பெல்கிரேடில் நடந்தது.

☐ இந்தியாவில் முதன் முதலில் ஆங்கிலக் கல்வியைப் புகுத்தியவர் மெக்காலே.

☐ நமது தேசிய காலண்டரின் முதல் மாதம் சைத்ர மாதம்.

☐ மாநில முதலமைச்சர் பதவி வகித்த முதல் இந்தியப் பெண் சுசேதா கிருபளானி.

☐ முதல் தமிழ் அகராதியை இயற்றியவர் வீரமா முனிவர்.

☐ சுருக்கெழுத்து முறையை முதலில் கண்டறிந் தவர் ஐசக் பிட்மன்.

☐ இந்திய சினிமாவில் முதல் குழந்தை நட்சத் திரம்-பாலசந்திரா.

☐ இந்திய சினிமாவில் முதல் பெண் குழந்தை நட்சத்திரம் மந்தாகினி.

☐ கி. மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் கிரேக்க மொழியில் நாடக இலக்கிய வளர்ச்சி காணப்படுகிறது. காவியங்கள் புராணங்கள் ஆகியவற்றிலிருந்துதான் இந் நாடகங்களுக்கு கருக்கள் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கின்றன. அக்கால கட்டத்தில் முதன் முதலாக 'தெஸ்பிஸ்' என்பவர்தான் ஒரே ஒரு நடிகனை வைத்து தன் நாடகங்களை எழுதியுள்ளார். அடுத்து எஸ்கிலஸ் என்பவர் இரண்டு நடிகர்களைக் கொண்ட நாடகங்களை எழுதினார். இன்று பல பாத்திரங் களைக் கொண்ட நாடகங்களை நாம் காணமுடிகிறது.

☐ சீன நாடகங்கள் முதன் முதலில் ஆபாசக் காட்சிகளைக் கொண்டு அமைந்திருந்தன. பி. பா. கி.

(Pi. Pa Ki.) என்ற குடும்பத்தினர் நாடகத்துறைக்குச் சிறந்த பணியாற்றியவர்கள். ஆபாசங்களை ஒழித்து நாடக மேடைக்கு மக்களிடையே மதிப்பையும் நம்பிக்கையையும் தேடித் தந்தனர்.

□ மாக்ஸிம் கார்க்கியின் (1868-1936) 'மேட்டுக் குடியினர்' என்ற முதல் நாடகம் பல தணிக்கைக்குப் பின்னர் அரங்கேறியும் வெற்றி பெறவில்லை.

□ முதல் உலகப் போர் தொடங்கும் போது அமெரிக்க விமானப்படையில் பணி செய்தவர்களின் எண்ணிக்கை எத்தனை தெரியுமா? வெறும் ஐம்பது பேர் தான்.

□ பிரிட்டனின் முதல் பெண் பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் ஆஸ்டர். ஆனால் இவர் பிறப்பால் ஓர் அமெரிக்கர்.

□ ஆண்டுதோறும் விளையாட்டில் சிறந்து விளங்கும் ஒருவருக்கு ராஜீவ் காந்தி கேம் ரத்தானா என்ற விருது வழங்கப்படுகிறது. ஒரு லட்ச ரூபாய் மதிப்பு உள்ளது இது. இந்த விருதை முதன் முதலாக (1992-1993) ஆம் ஆண்டிற்கு செஸ் விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்திற்குக் கிடைத்திருக்கிறது.

□ தேசிய விருதுபெற்ற முதல் தமிழ்த்திரைப் படம் மலைக்கள்ளன்.

□ கி.பி. 970-இல் தான் முதன் முதலாகக் காகிதப் பணம் சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்

பிறகு 1662 பிரான்ஸ் பாங்கில் காகிதப் பணம் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

☐ பாங்க் ஆப் சுவீடன்தான் உலகின் முதல் பாங்க்காம். இது 1656ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது.

☐ முதன் முதலில் 1542இல் தான் நம் நாட்டில் ஒரு ரூபாய் நாணயம் அச்சடிக்கப்பட்டது.

☐ 1920 இல் நடந்த ஒலிம்பிக்கில் தான் இந்தியா முதல் முறை பங்கேற்றது.

☐ விம்பிள்டனின் செமிபைனல் சென்ற முதல் இந்தியர் இராமநாதன் கிருஷ்ணன் தான்.

☐ சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக தமிழில் டாக்டர் பட்டம் பெற்றவர் மு. வரதராசனார் அவர்களே.

☐ 1896-இல் ஏதென்ஸில் நடந்த முதல் ஒலிம்பிக்ஸில் கலந்து கொண்ட நாடுகள் ஒன்பதே.

☐ பரத நாட்டிய சாஸ்திரம் எனும் நாடக இலக்கண நூலை எழுதியதின் மூலம் 'முதல் நாடகக் கலைஞர்' என்னும் பெருமைக்குப் பரதர் உரியவராகிறார்.

☐ முதன் முதலாக உருவக நாடக முறையைக் கையாண்டவர் கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த அஸ்வகோஷ் என்பவர்தான்.

☐ மேல்நாட்டு நாடக முறையைப் பின்பற்றித் தமிழில் எழுதப்பட்ட முதல் நாடகம், 1867-இல் காசிவிசுவநாத முதலியார் எழுதிய 'டம்பாச்சாரி விலாசம்' ஆகும். இவரே 1868-இல் 'தாசில்தார்' நாடகத்தையும் எழுதியுள்ளார். இரு நாடகங்களுமே சமூக நாடகங்களாகும்.

☐ மனிதன் முதன் முதலாகக் கண்டுபிடித்த உலோகம் செம்பு.

☐ ஜே.ஜே. தாம்சன்தான் முதலில் எலக்ட்ரானைக் கண்டுபிடித்தார்.

☐ 1948இல்தான் முதலாவதாக ஏர் இந்தியா தொடங்கப்பட்டது.

☐ கவர்னர் பதவி வகித்த முதல் இந்தியர் லார்ட் சின்ஹா.

☐ கருவில் முதலில் உருவாகும் உறுப்பு கண்கள் தான்.

☐ காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தர்மபாலர்தான் முதன்முதலில் புத்தமதத்தில் தியான முறையைப் புகுத்தியவர்.

☐ ஆசிய நாடுகளின் முதல் மாநாடு 1947இல் புதுடில்லியில் நடைபெற்றது.

☐ ராபர்ட் வால்போல் என்பவர்தான் பிரதம மந்திரி என்ற பட்டத்துடன் அப்பதவியை முதன் முதலில் வகித்தவர்.

☐ மாக்டொனால்டு என்பவர்தான் பிரிட்டனில் 1924இல் அமைந்த முதல் தொழிற்கட்சி அரசின் பிரதமராக இருந்தவர்.

☐ எக்ஸ்ப்ளோரர்1 என்ற விண்வெளிக்கோள் அமெரிக்காவின் செயற்கைக் கோளாகும்.

☐ ஏர்கண்டிஷனிங் முறையை முதலில் கண்டறிந்தவர் வில்லிஸ் காரியர் என்ற அமெரிக்கர்.

☐ ஜூடோ முறையை முதலில் கண்டவர் டாக்டர் ஜிகரோ கானோ என்பவர்தான்.

☐ வாலிபால் விளையாட்டை முதலில் அறிமுகப் படுத்தியவர் வில்லியம் மார்க்கன்.

☐ முதல் பானிப்பட் போரில் வென்றவர் பாபர். தோற்றவர் இப்ராகிம் லோடி.

☐ ரால்ஃப் புஞ்சே, அமெரிக்க நீக்ரோக்களுள் முதல் நோபல் பரிசு பெற்றவர்.

☐ மனிதனுக்கு முதன் முதலில் தெரிந்த பழம் ஆப்பிள்தான்.

☐ ஆப்பிரிக்காவில் முதல் காலனியை ஏற்படுத்தியவர் பெல்ஜியம் நாட்டினர்.

☐ முத்தையா செட்டியார்தான் சென்னையின் முதல் மேயராகப் பதவி ஏற்றவர்.

☐ ஆரியபட்டாதான் இந்தியாவின் முதல் செயற்கைக் கோள்.

☐ ஸ்டெயின்லஸ் ஸ்டீலை முதலில் கண்டுபிடித்தவர் ஹாரி பிரியர்லி.

☐ டாக்டர் கிருஸ்டியன் பார்னாட் என்பவர்தான் இருதயமாற்று சிகிச்சையை முதலில் செய்தவர்.

☐ பம்மல் சம்பந்த முதலியார் 1873 பிப்ரவரி முதல் நாள் பிறந்தார். இவர் தமது முதல் நாடகத்தை 1891இல் வெளியிட்டார். 'புஷ்பவல்லி' என்னும் அந்த முதல் நாடகத்தை அரங்கேற்றும்போது அவருக்கு வயது 18 ஆகும்.

☐ தென்னாப்பிரிக்காவில் ஏற்பட்ட முதல் ஐரோப்பியக் குடியிருப்பு நன்னம்பிக்கை முனையில் ஏற்பட்ட டச்சு கிழக்கு இந்திய கம்பெனி (குடியிருப்பு) ஆகும்.

☐ நவீன இலக்கியத்தில் யதார்த்த நிலையைப் பிரதிபலித்த முதல் எழுத்தாளர் பால்சாக் என்பவர்.

☐ எலிசபெத் ஆண்டர்சன்தான் முதன் முதலில் லண்டனில் மருத்துவத் தொழில் புரிய அனுமதிக்கப் பட்ட பெண்.

☐ எர்னஸ்ட் ரூதர்போர்டுதான் முதன் முதலாக அணுவைப் பிளந்து காட்டியவர்.

☐ அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பதவி வகித்த முதல் இந்தியர் தலிப்சிங் ஸாண்ட்.

☐ முதன் முதலில் வெளியான முழுநீள கார்ட்டூன் படம் வால்ட் டிஸ்னியின் ஸ்னோ ஒயிட்.

☐ இந்தியாவில் சபாநாயகர் பதவி வகித்த முதல் பெண் கே. எஸ். நாகரத்தினம்மா, மைசூர்.

☐ நடிகர்களின் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் நாடகம் இயற்றும் நிலை சங்கரதாஸ் சுவாமிகளிடம் இருந்தது. 'சண்முகம் கதா நாயகனாக நடிப்பதற்கு ஏற்றபடி ஒரு நாடகம் எழுதுங்கள்' என்று தத்துவ மீனலோசினி சபை உரிமையாளர்களில் ஒருவரான பழனியாபிள்ளை கேட்டுக் கொண்டதற்கிணங்க - முதன் முதலாக 'அபிமன்யு' நாடகத்தை ஓரிரவிலேயே எழுதி சாதனை புரிந்தவர் சுவாமிகள்.

☐ நினைவுத் தபால் தலை வெளியிட்ட முதல் நாடு அமெரிக்கா. ஆண்டு 1893இல்.

☐ உலகில் தொகுக்கப்பட்ட முதல் கலைக் களஞ்சியம்-ரோம் நாட்டு அறிஞர் பிளைனி 77ஆம் ஆண்டு தொகுத்த இயற்கை வரலாறு. 1600 வரை அது ஒன்று தான் இருந்தது.

☐ பதினெட்டாம் நூற்றாண்டளவில் தெரு முனைகளில் நடைபெற்று வந்த நாடகங்களைச் செப்பம் செய்யப்பட்ட அரங்குகளில் முதன்முதல் நடத்தியவர் கோவிந்தசாமிராவ் ஆவார். தஞ்சையில் பிறந்த இவருக்கு மராத்தி தாய்மொழி; தமிழ், தெலுங்கு இந்தி, ஆங்கிலம் ஆகிய பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்.

☐ 1894இல் பண்டிதர் க. கோபாலாச்சார் என்பவர் 'ஆரிய சபா' என்னும் நாடகமொன்றை இயற்றினார். இதுவே முதல் தமிழ் தேசிய நாடகமாகும்.

☐ முதன் முதலில் ஹோமியோபதி மருத்துவ முறையைக் கண்டுபிடித்து உலகுக்கு உணர்த்தியவர் கிரிஸ்டியன் ஃபிரெடரிக் சாமுவேல் ஹனிமான் என்பவரே. ஜெர்மன் (மெய்ஸென்) நகரத்தில் 1755ஆம் ஆண்டு ஏப்ரல் பத்தாம் நாள் பிறந்தார்.

☐ முதலில் ஹோமியோபதி மருத்துவ முறையை இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தியது 1839 ஆம் ஆண்டில்தான். அறிமுகப்படுத்தியவர் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஜே. எம். ஹோனிக் பெர்ஜர் என்பவர்தான்.

☐ நாடகத்தில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை முதன் முதலில் சேர்த்துச் சுவை கூட்டியவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்தான்.

☐ வங்க மொழியில் முதன் முதலில் 1818 ஆம் ஆண்டு 'திக்தர்சன்' என்னும் பெயரில் மாத இதழ்

ஒன்று டாக்டர் மார்ஷ்மன், வார்ட் ஆகியோரால் வெளியிடப்பட்டது.

☐ டால்ஸ்டாயின் படைப்புகளுள் சிறந்த ஒன்று 'போரும் அமைதியும்' எனும் புதினம். இந்நாவலில் தான் முதன் முதலாக உலகிலேயே அதிக கதாபாத்திரங்களைக் கொண்டு எழுதப்பட்டது. எத்தனை கதாபாத்திரங்கள் தெரியுமா? ஐநூறுக்கும் மேலே.

☐ கைரேகையைப் பதிவு செய்யும் பழக்கத்தை உலகிலேயே முதன் முதலில் தொடங்கியவர் ஐ. சி. எஸ். அதிகாரியாகிய வங்காளத்தில் ஜூங்கிபூர் என்னுமிடத்தில் பணியாற்றிய வில்லியம் ஹேர்ஷெல் என்னும் ஆங்கிலேயரே.

☐ மாண்ட்ரீலில் 1976இல் நடைபெற்ற ஒலிம்பிக்கிலும் மாஸ்கோவில் 1980இல் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களிலும் விற்போர் போட்டி இடம்பெற்றது. லாஸ்ஏஞ்சலஸில் 1984இல் நடைபெற்ற போட்டிகளிலும் இது இடம்பெற்றது.

1979இல் கல்கத்தாவில் முதன் முறையாக ஆசிய அளவிலான வில் அம்புப் போட்டிகள் நடத்தப்பட்டன.

☐ இந்தியாவிலேயே முதன்முதலாகப் பின்னணி இசை 1934ஆம் ஆண்டு 'பாக்கியாச்சக்கரா' என்ற படத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

☐ கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அலெக்ஸாந்திரியாவில் புகழ்பெற்ற கிரேக்க மருத்துவப் பள்ளி

இருந்தது. இங்கு ஹீரோஃபிலஸ் என்ற புகழ்பெற்ற மருத்துவர் இருந்தார். இவர்தான் நாடித்துடிப்பைக் கொண்டு முதன் முதலில் நோயின் தன்மையைக் கண்டவர். நாடித்துடிப்பைக் காண அந்தக் காலத்தில் எந்தக் கடிகாரம் பயன்பட்டது தெரியுமா? நீர்க் கடிகாரம்தான்.

☐ புகழ் பெற்ற அராபிய வைத்தியர்களில் ஒருவர் ராஸஸ். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர்தான் முதலில் தட்டம்மைக்கும், பெரியம்மைக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டறிந்தவர்.

☐ இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் 1956 ஆகஸ்டு 6ஆம் தேதி பம்பாயில் செயல்படத் தொடங்கியது.

☐ ஐசன்ஹோவர் என்ற அமெரிக்க அதிபர்தான் நம் நாட்டிற்கு விஜயம் செய்த முதல் அமெரிக்க அதிபர்.

☐ உலகக் கோப்பைக்கான முதல் கிரிக்கெட் மாட்ச் லார்ட்ஸ்-லண்டனில்.

☐ நோபல் இலக்கியப் பரிசு பெற்ற முதல் ஆப்ரிக்கர் வோல் சோயிங்கா.

☐ சீனா முதன் முதலில கலந்து கொண்ட ஒலிம்பிக் 1984 லாஸ் ஏஞ்சல்ஸில்தான்.

☐ இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் 1951 ஜூன் மாதத்தில் செய்யப்பட்டது.

☐ கேரளாவில்தான் முதன் முதலில் ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்பட்டது.

☐ லேசர் கதிர்களை முதன் முதலில் கண்டவர் அமெரிக்காவைச் சேர்ந்த கார்டன் கோல்ட் என்பவரே!

☐ தெலுங்கிசை பெருகாமல் தமிழிசை வளர்ச்சிக்கு ஊக்கமூட்டும் வகையில் முதன் முதலாக 1929 ஆம் ஆண்டு அண்ணாமலைச் செட்டியார் முயற்சியால் 'தமிழிசை இயக்கம்' தோன்றியது.

☐ நாடக மாந்தர்களின் உரையாடலே இல்லாமல் தமிழில் எழுதப்பட்ட முதல் புலமை நாடகம் பாரதிதாசனார் எழுதிய 'அமைதி' எனும் நாடகம் தான்.

☐ இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தமிழகத்தில் 1938 இல் முதன் முதல் நடந்தது.

☐ வடமொழியில் முதன் முதலில் பாகவதத்தில் தான் இரணியன் கதை சொல்லப்பட்டுள்ளது.

☐ ஒரே நாளில், ஒரே இடத்தில், ஒரே காட்சியில் நடப்பதான நிகழ்ச்சிகளைக் கொண்டே எழுதப்பட்ட முதல் நாடகம் பாரதிதாசன் எழுதிய 'கொய்யாக் கனிகள்' நாடகம்தான்.

☐ அரேபிய மருத்துவர்களில் புகழ்பெற்றவர் அவிலென்னா என்பவர். இவர் பாரசீக தேசத்தவர்.

(980-1037) நுரையீரலைத் தாக்கும் எலும்புருக்கி நோய் ஒரு தொத்துநோய் என்று முதலில் கண்டறிந்து சொன்னவர். இவர்தான் மருத்துவ விதி என்ற புகழ் பெற்ற நூலை எழுதியவர். இன்றும் இந்த நூல் ஒப்பரிய நூல் வழக்கில் உள்ளது.

☐ முதல் மருத்துவப் பள்ளி இத்தாலியில் உள்ள ஸாலர்னோ எனற நகரில்தான் ஏற்பட்டது.

☐ தமிழில் வெளிவந்த முதல் சினிமா பத்திரிகை, சுதந்திரத்திற்கு முன்னால் வெளிவந்த 'சினிமா உலகம்' என்ற பத்திரிகைதான்.

☐ சர்வதேச அளவில் விளையாட்டுத் துறையின் மேம்பாட்டுக்காக அரிய சேவை புரிந்தவர்களுக்கு இந்த ஆண்டு 'ஜெஸ்ஸி ஒன்ஸ்' என்ற விருதை வழங்கியுள்ளது. முதன் முதலில் இந்த விருதைப் பெறுகின்றவர் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி (ஐ ஓ.சி) தலைவரான சமரஞ்ச்.

☐ தெ. பொ. கிருஷ்ணசாமி பாவலரின் 'கதரின் வெற்றி'தான் தமிழ்நாட்டில் முதன்முதல் நடைபெற்ற தேசிய சமூக நாடகம். நடைபெற்ற ஆண்டு 1922.

☐ 'பிரெஞ்சு மண்ணின் சேக்சுபியர்' எனப் போற்றப்படுகிற மோலியர் (1622-1673) மிகச் சிறந்த நாடகப் படைப்புகள் மூலம் மக்கள் மனங்களில் இடம் பிடித்தவர். அவர் நாடகங்களில் சிறிய துணைப்

பாத்திரங்களை ஏற்று நடித்து வந்தவர். அப்படி மோலியர் 'லெமலாத் இமாஜினேர்' என்னும் தம்முடைய நாடகத்தில் நடித்துக் கொண்டு இருந்த போதே மாரடைப்பால் மறைந்தார். உலக அளவில் நாடகம் நடித்துக் கொண்டிருக்கும்போதே முதன் முதலில் மேடையில் இறந்தவர் மோலியரே!

☐ தமிழகத்தில்-சென்னையில் நாடக மேடையிலேயே நடித்துக்கொண்டு இருக்கும்போது முதன் முதலாக இறந்தவர் விஸ்வநாததாஸ். இவர் சென்னை-ராயல் தியேட்டரில் 1940டிசம்பர் 31ஆம் நாள் நடந்த 'வள்ளி திருமணம்' நாடகத்தில் சுப்ரமணியர் வேடத்தில் மயில் மீது இருந்து தேசபக்திப் பாடியபடியே மாரடைப்பால் மறைந்தார்.

☐ பம்பாயில் உள்ள 'தி பிரசிடென்ஸ் பாங்க்' தான் இந்தியாவில் முதன்முதல் தோன்றிய வங்கியாகும்.

☐ லண்டனில் முதன் முதலில் 1880இல்தான் டெலிபோன் டைரக்டரி வெளியிடப்பட்டது. சிறிய பாட்டுப் புத்தக அளவில் 702 பிரதிகளே அச்சிடப்பட்டன.

☐ உலகின் முதல் குடியரசு நாடு 'ஸ்பார்ட்டா'.

☐ முதன் முதலில் மனிதனுக்கு மனிதனின் இரத்தத்தைச் செலுத்தலாம் எனக் கண்டுபிடித்தவர் 'ஜேம்ஸ் ப்ளெண்டல்' என்பவர்தான். ஆண்டு 1800.

□ துவிச் சக்கரவண்டி-பைசைக்கிள். இதனை பான்ட்ரெயில் என்னும் ஜெர்மானியரால் 1818இல் முதன் முதலாக செய்யப்பட்டது என்றாலும் இப்பொழுது உள்ள சைக்கிள் 1885இல்தான் உருப்பெற்றது.

□ ஹெலிகாப்டரில் முதன் முதலில் பறந்து காட்டியவர் பிரெஞ்சுப் பொறியாளராகிய 'ரோல்தெபஸ்கார'. ஆண்டு-1923.

□ படங்களை தந்தி மூலம் அல்லது ரேடியோ மூலம் அனுப்பலாம் என முதலில் கண்டுபிடித்தவர் ஆர்தர் கோரின் என்னும் ஜெர்மன் விஞ்ஞானி(1904)

□ கடிகார ஊசல் (பெண்டுலம்) கண்டுபிடித்தவர் முதல் கலிலியோ என்னும் இத்தாலியர்தான் (1564-1642)

□ வாட்டர்மேன் என்னும் அமெரிக்கரால் முதலில் 1844இல் கண்டுபிடிக்கப்பட்டதுதான் ஃபவுண்டன் பேனா.

□ அண்ணல் காந்திக்கு முதன் முதலில் தமிழ் கற்றுக் கொடுத்தவர் கண்ணப்ப செட்டியார் என்பது தவறு. தில்லையாடி ஆ. தம்பியப்பச் செட்டியார் என்பவர்தான். (1896)இல்.

□ முதன் முதலில் காளை மாட்டுச் சண்டையை நடத்திய நாடு சீனாதான்.

□ கார்ட்டூன்களை முதலில் தமிழ் இதழ்களில் வெளியிட்டவர் பாரதியார். இந்தியாவில் 1891இல்

'டெல்லி ஸ்கெட்ச் புக்' என்ற மாத இதழில்தான் முதலில் கார்ட்டூன் படம் வெளியிடப்பட்டது.

☐ கி.பி. 1741ஆம் ஆண்டு சாமுவேல் ரிச்சர்ட்டன் என்பவர் 'பாமெலா அல்லது கற்பின் பரிசு' என்னும் நாவலை எழுதினார். இதுவே ஆங்கில மொழியின் முதல் நாவல்.

☐ கி.பி. 1865இல் 'துர்க்கோ நந்தினி' என்ற நாவலை பங்கிம் சந்திரர் வங்கமொழியில் எழுதி வெளியிட்டார். இதுவே இந்தியாவின் முதல் நாவல்.

☐ இந்தியாவுக்கு வந்த முதல் ஆங்கிலேயரின் பெயர் ஜான் மில்டன் ஹால் என்பதாகும். இவன் வர்த்தகன் இல்லை. பிரிட்டிஷ் அரசி எலிசபெத்தின் தூதுவனாவான். இவன் 1599ஆம் ஆண்டு, மொகலாயச் சக்கரவர்த்தி அக்பரின் அவைக்கு வந்தான். அந்த நிகழ்ச்சி நடந்து முடிந்த ஓராண்டுக்குப் பின்பு கி.பி. 1600இல் இந்தியாவுடன் வியாபாரம் செய்ய பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி லண்டனில் தோற்றுவிக்கப்பட்டது.

☐ காங்கிரஸின் முதல் மாநாடு 1885 டிசம்பர் 28, 29, 30 ஆகிய மூன்று நாள்களிலும் பம்பாயில் நடைபெற்றது.

☐ இந்தியாவின் முதல் பிரதமர் நேரு.

☐ 1895இல் தமிழில் முதல் வரலாற்று நாவலான மோகனாங்கி' வெளிவந்தது. இது நாயக்க மன்னர்

களின் வரலாற்று நாவல். 1919ஆம் ஆண்டில் இதே நாவல் சுருக்கப்பட்டு 'சொக்கநாத நாயக்கர்' என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

☐ 1910ஆம் ஆண்டில் 'சத்தியவல்லி' என்னும் வரலாற்று நாவல் வெளிவந்தது. இதை எழுதியவர் ஆர். பி. குழந்தைசாமிப் பிள்ளை. இது ராஜஸ்தானத்து வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டது. அதனால் தமிழ்நாட்டிற்கு அப்பால் உள்ள (இந்திய) மாநிலச் சரிதத்தை வைத்து தமிழில் எழுதப்பட்ட முதல் நாவல் இதுவே.

☐ 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி புனைகதை இலக்கியத்தில் கருத்தைச் செலுத்திய பின் அவர் உருவாக்கிய முதல் நாவல் 'விமலா' என்னும் குறுநாவல். 1922ஆம் ஆண்டு முதன் முறையாக தேசபக்தராக சிறைத் தண்டனையை அனுபவித்தபோது கூடலூர்ச் சிறையில் கல்கி இந்நாவலை எழுதினார்.

☐ இந்தியாவில் அரிசி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் மேற்குவங்காளம்.

☐ ஜி. சேகரன் இயக்கிய 'காவல் பூனைகள்' படம் தமிழகத்தின் ஸ்டிரியோ போனிக் முறையில் எடுக்கப்பட்ட முதல் படமாகும்.

☐ இந்தியாவிலேயே முதன் முதலில் மருத்துவக் கல்வி (எம்.பி.பி.எஸ்.) பட்டமும், சென்னை சட்ட மன்ற மேலவை உறுப்பினர் பதவியும் பெற்ற ஒரே

பெண்மணி நம் தமிழகத்தைச் சேர்ந்த முத்துலட்சுமி அம்மையார்தான்.

☐ முதன் முதலில் அஞ்சல் வில்லைகள் நம் நாட்டில் அச்சிடப்படவில்லை. இலண்டனில் 1856-லிருந்து 1926 வரை 'தாமசு டிலாரு' என்ற நிறுவனம் அச்சிட்டுக் கொடுத்தது. பின்னர்தான் நாசிக்கில் இந்தியப் பாதுகாப்பு அச்சகத்தை நிறுவி அஞ்சல் தலைகள் அச்சிடப்பட்டன.

☐ உலகில் முதன் முதலாக வெளிவந்த நாளிதழ் 6ஆம் நூற்றாண்டில் சீனாவின் தலைநகர் பீகிங்கிலிருந்து வெளிவந்த 'ட்ஸிங் பாவோ' என்ற அரசு நாளிதழ்கள்தான்.

☐ இங்கிலாந்தின் முதல் செய்தித்தாளின் பெயர் 'வாரச் செய்திகள்'. காலம் 1665.

☐ அமெரிக்காவின் முதல் செய்தி இதழின் பெயர் 'பொது நிகழ்ச்சிகள்' ஆகும். காலம் 1690.

☐ கல்கத்தாவின் முதல் செய்தித்தாள் 'வங்காள கெசட்' என்பதாகும். இதை 'ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி' என்பவர் 1780இல் வெளியிட்டார்.

☐ பம்பாயில் வெளிவந்த முதல் செய்தித்தாள் 'பாம்பே ஹெரால்டு' என்பதாகும்.

☐ சென்னையில் வெளிவந்த முதல் தமிழ் கிழமை இதழ் 'தினவர்த்தினி' என்பதாகும். ஆண்டு 1856.

☐ சென்னையில் இந்தியரால் வெளியிடப்பட்ட முதல் ஆங்கில இதழ் 'HINDU' தான்

☐ 'டைபாய்டு' என்ற நச்சுக் காய்ச்சலை தடுத்துக் குணமாக்க முதன் முதல் மருந்து கண்டுபிடித்தவர் 'ஆலம்ராட்ரைட்' என்ற ஆராய்ச்சியாளர்தான்.

☐ முதன் முதலில் காசோலை எழுதும் முறையைக் கண்டு பிடித்தவர், இங்கிலாந்து மன்னர் முதலாம் எட்வர்டு. நாள் 10-9-1281.

☐ 'போலியோ' என்னும் இளம்பிள்ளை வாதத்திற்கு முதலில் மருந்து கண்டு பிடித்தவர் ஜோன்ஸ் சால்க் என்பவர்.

☐ 1962 அக்டோபர் 26 ஆம் நாள் சீனப்படையெடுப்பின் போது முதன் முறையாக விரைவுச் சட்டம் அமலுக்கு வந்தது.

☐ முதல் முதலில் இலங்கையோடு குதிரை வாணிபம் செய்தவர் தமிழரேயாவர்.

☐ காசு கொடுத்துப் பரிசுச் சீட்டுகள் வாங்கும் முறையும், அதற்குப் பரிசாக ரூபாய்கள் மட்டும் வழங்கும் முறையும் முதன் முதலில் 1612 இல் இங்கிலாந்தில் அறிமுகப் படுத்தப்பட்டது. பிறகு இந்தியாவில் 1850 இல் ஆங்கிலேய ஆளுநர் 'சார்லசு எட்வர்ட் டிரிவேலியன்' என்பவரால் சென்னை மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

□ தமிழில் முதன்முதலில் சிறுகதை எழுதியவர் வ. வே. சு. அய்யர். சிறுகதையின் பெயர் 'குளக்கரை.'

□ உலகில் முதன் முதலில் தேசியக் கொடியைக் கண்டு பிடித்தது டென்மார்க் நாடுதான். அறிமுகப் படுத்திய ஆண்டு 1218.

□ உலகிலேயே முதன் முதலில் கிறிஸ்துமஸ் வாழ்த்து தந்தை செர் ஹென்றிகோலி என்பவரால் 1848 இல் உருவாக்கப்பட்டது.

□ திருக்குறள் முதன் முதலில் அச்சுக்கு வந்த ஆண்டு 1838.

□ அமைதியின் சின்னம் புறா ஓவியம். இதனை முதன் முதலில் வடிவமைத்தவர் புகழ் பெற்ற ஓவியர் பிக்காசோ.

இந்தியாவின் முதல் ஏர்கண்டிஷன் திரையரங்கம் 1935 இல் தெற்கு பம்பாயில் கட்டப்பட்ட ரீகல் தியேட்டர்தான்.

□ முதன் முதலில் இந்தியாவின் அரசியல் அமைப்பைத் தயாரிக்க ஆன செலவு ரூபாய் 63,96,729. எடுத்துக் கொண்ட காலம் 2 ஆண்டு, 11 மாதம் 8 நாள். தயாரிப்பில் பங்கு கொண்டவர்களின் எண்ணிக்கை 368 பேர்.

□ நம் நாட்டில் வேதகாலத்திலிருந்தே பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்படவில்லை. 1956 ஆம் ஆண்டு நேரு பிரதமராக இருந்த போதுதான் முதன் முதலாக இந்து பெண்ணுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பெண்களுக்கும் சொத்துரிமை கிடைக்க வழி கிடைத்தது.

□ முதன் முதலில் தற்கொலை செய்து கொண்ட நடிகை பிரபல ஹாலிவுட் நடிகை மர்லின் மன்றோ தான். இவருக்கு பலகோடி சொத்தும் பல வசதிகள் இருந்தும் ஒருநாள் இரவு அதிகமாக தூக்க மாத்திரைகளைத் தின்று உயிரை மாய்த்துக்கொண்டார்.

□ இந்தியாவில் முதன் முதலில் கேரளாவில் தான் கம்யூனிஸ்ட் மந்திரிசபை 1950 ஆம் ஆண்டு அமைந்தது. கம்யூனிஸ்ட் கட்சி அப்போது பிளவு படாது இருந்தது. இ. எம். எஸ். நம்பூதிரிபாடு முதலமைச்சராகப் பணியாற்றினார். இந்தியாவின் மூதல் கம்யூனிஸ்ட் மந்திரிசபையைக் கவிழ்த்த பெருமையை இந்திரா காந்தியே ஏற்றுக்கொண்டார்.

□ இந்தியாவிலேயே முதன் முதலாக எலெக்ட்ரானிக் டைப்ரைட்டர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் சிறப்பு என்னவென்றால் டைப்ரைட்டரினுள், தவறுகளைக் கண்டுபிடித்து தானே அழித்து விடும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. எனவே பிழைகளை அழிக்க ரப்பர் தேட வேண்டியதில்லை. ஒக்லா

தொழிற்சாலை உருவாக்கிய இது 'டிஸ்பிளே' பொருட் காட்சியில் வைக்கப்பட்டது. இந்தி மொழியில் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ள இது விரைவில் மற்ற மொழிகளிலும் தயாரிக்கப்படும்.

☐ ரஜினியின் முதல் படமான 'அபூர்வராகங்கள்' படத்தில் ரஜினிக்கு அப்பா வேடம். ஸ்ரீ தேவியின் முதல் படமான 'மூன்று முடிச்'சில் ஸ்ரீ தேவிக்கு அம்மா வேடம். இப்படி இருவரும் அப்பா, அம்மா வேடங்களில் முதலில் நடித்தால்ததானோ என்னவோ இருவரும் 'விர்'ரென்று முன்னேறி விட்டனர்.

☐ 1670-க்குப் பின்தான் முதன் முதலில் கடிகாரங்கள் இரண்டு முகள்ளோடு வந்தன.

☐ முதன் முதலில் சீனாவில்தான் நாணயப் புழக்கம் வந்தது.

☐ காந்தியடிகள் முதன் முதலில் எழுதிய நூலின் பெயர் இந்திய சுயராஜ்யம்.

☐ கதர் முதன் முதலில் உற்பத்தி செய்யப்பட்ட இடத்தின் பெயர் சபர்மதி ஆசிரமம்.

☐ முதன் முதலில் கதர் எத்தனை அகலத்தில் நெசவு செய்யப்பட்டது? 27 அங்குலத்தில்.

☐ எந்த ஆண்டு கதர் இயக்கம் முதலில் தொடங் கப்பட்டது? 1920 இல்.

☐ வைகுந்தலால் மேத்தாதான் அகில இந்திய காதி கமிஷனின் முதல் தலைவர்.

☐ வெ. இராமச்சந்திரன்தான் தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் முதல் செயலாளர்.

☐ போச்சம் பள்ளிதான் இந்தியாவில் முதன் முதலில் பூதானம் தந்த ஊர்.

☐ காந்தியடிகள் முதன் முதலில் தொடங்கிய ஆசிரமத்தின் பெயர் சபர்மதி ஆசிரமம்.

☐ கங்கா பென் மஜூம்தார் என்பவர்தான் காந்தியடிகளுக்கு முதன் முதலில் இராட்டையைக் கண்டு பிடித்துத் தந்தவர்.

☐ தமிழகத்தில் தீபாவளி விற்பனையில் முதலிடம் வகிக்கும் சர்வோதய சங்கம் கோவை வடக்குச் சர்வோதய சங்கம்தான்.

☐ ஜப்பானில் முதலிரவன்று புதுமணத் தம்பதிகளுக்கு சிற்றின்பம் பற்றிய சித்திரங்கள் கூடிய தலையணைப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன.

☐ 1982 இல் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அரசு பாவேந்தர் விருது என்ற பெயரில் விருது ஒன்றை அறிவித்து - கவிஞர் சுரதாவிற்கு வழங்கிச் சிறப்பை அதிகப்படுத்தியது. முதன் முதலாக பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்றவர், பாவேந்தரின் சீடர் கவிஞர் சுரதா தான்.

☐ முதன் முதலில் 1941 இல் தாழ்த்தப்பட்டோர் கட்சியை அகில இந்தியக் கட்சியாக உருவாக்கியவர் டாக்டர். அம்பேத்கர்தான்.

☐ கி. பி. 1679 இல் ப்ரொ இன்சா என்ற பாதிரியாரால் முதன் முதலில் தமிழ் போர்ச்சுகிசிய அகராதி இயற்றப்பட்டது. இது மறைந்து விட்டது. பின்புதான் கொன்ஸ் டான்ஸ் ஜோசப் பெஸ்கி என்ற வீரமாமுனிவர் சதுரகராதியினை கி. பி. 1732 இல் உருவாக்கினார்.

☐ கே. பி. சுந்தரம்பாள்தான் தமிழ்த் திரை உலகில் நடிக்க முதன் முதலில் ஒரு லட்ச ரூபாய் வாங்கிய நடிகை.

☐ கே. பி. சுந்தராம்பாள்தான் முதன் முதலில் கதாநாயகன் வேடத்தில் தோன்றிய முதல் நடிகை. படம் : நந்தனார்.

☐ படத்தை இயக்கி, அதே படத்தில் கதாநாயகியாகவும் நடித்த முதல் தமிழ்த்திரை நடிகை. டி. பி. ராஜலட்சுமி. படம் மிஸ். கமலா.

☐ முதன் முதலில் 1965இல் தொலைக்காட்சி கல்வி ஒளிபரப்பு சானல் உருவாக்கப்பட்டது.

☐ உலகின் முதலாவது இரும்புப் பாலம் 1779இல் 'செவர்ன்' நதியின் குறுக்கே கட்டப்பட்டது. இது இங்கிலாந்து நாட்டில் உள்ளது.

☐ கம்பி செருகிக்கட்டும் கான்கிரீட் பாலம் முதன் முதலில் 1887இல் ஜெர்மனியில் கட்டப்பட்டது.

☐ 1930இல் வெளியான கவிகாளிதாஸ் படம் ஊமைப்பட சகாப்தத்திலிருந்து தமிழ் சினிமா பேசும் பட சகாப்தத்திற்கு மாறியபோது வெளியான முதல் பேசும் படம்.

☐ ஆசியாவிலேயே முதன் முதலில் டி. வி. யை அறிமுகப்படுத்திய நாடு தாய்லாந்துதான்.

☐ உலகில் முதன் முதலாக யானைகள் மராத்தன் ஓட்டம் 1989 ஏப்ரலில் கேரளாவின் திருச்சூர் மாவட்டத்தில் நடைபெற்றது. இந்த அதிசய நிகழ்ச்சியை இரண்டு பிரெஞ்சு நிறுவனங்கள் இந்திய மற்றும் கேரள சுற்றுலா வளர்ச்சி வாரியங்களுடன் இணைந்து நடத்தியது.

☐ உலகில் முதன் முதலில் பெர்லினில் தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டது. (1881)

☐ முதலில் இந்தியாவில் ரிசர்வ் வங்கி திறக்கப்பட்டது 1935 இல்.

☐ முதன் முதலில் போரில் விஷவாயு பயன்படுத்தப்பட்டது. பிரான்சுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் போரில் குளோரின் சிலிண்டர் ஏவப்பட்டது 1950 இல்.

☐ ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ரெளஉமுரா நாய்கள் இழுக்கும் வண்டிகள் மூலம்தான் முதன் முதலாக வடதுருவத்தை 1978 இல் அடைந்தார்.

☐ பிரிட்டனில் முதல் பொது வேலை நிறுத்தம் 1926இல் தொடங்கியது.

☐ 1857 இல் தான் முதல் இந்திய சுதந்திரப் போராட்டம் நடந்தது.

☐ இந்தியாவில் முதன் முதலில் பம்பாய்க்கும் தாணாவிற்கும் இடையேதான் புகைவண்டி விடப் பட்டது.

☐ வீடுகளுக்கு நம்பர் கொடுக்கும் பழக்கம் 1463 ஆம் ஆண்டு ஏற்பட்டது. பிரான்ஸ் தலை நகரான பாரிஸ் நகரில் தபால் கொடுப்பதற்காக இந்த முறை கையாளப்பட்டது.

☐ உலகிலேயே முதன் முதலாக ஒரு புதிய 'லேசர்' தொழில் நுட்பம் மூனிச் அருகில் உள்ள 'போஹன் ஹாஸன்' கிளினிக்கில் வெற்றிகரமாக அமைக்கப்பட்டது.

☐ சென்னை-மண்ணடி தெருவில் காயல் பட்டினத்து முஸ்லிம்கள் முதன் முதலாக பழைய இரும்பு வியாபாரம் செய்யத் தொடங்கினர். காயல் பட்டினத்தார் கடை வைத்த காரணத்தால் 'காயல் பட்டினத்தார் என்பது மருவி 'காயலான்' கடை என்ற பெயர் வந்தது.

☐ விமானம் ஓட்டுதற்கு லைசன்ஸ் பெற்ற முதல் இந்தியர் ஜஹாங்கீர் ரதன்ஜிதாதாபாய் டாடா. 1930 இல் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குத்

தனியே விமானத்தை ஓட்டிச் சென்றார். 1932 இல் இந்தியாவில் விமானப் போக்குவரத்துத் தொடங்கிய போது முதல் விமானத்தைக் கராச்சியில் இருந்து பம்பாய்க்கு ஓட்டி வந்தவரும் இவரே. 1982 இல் பொன் விழா கொண்டாடப்பட்ட போதும் இவரே விமானம் ஓட்டி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

☐ உழைக்கும் ஏழைத் தாய்க் குலத்திற்காக முதலில் சென்னையில் குழந்தைகள் காப்பகத்தைத் தோற்றுவித்தவர் முன்னாள் சென்னை மேயராக இருந்த பி. சுந்தரராவ் நாயுடுதான். திக்கற்றவர் களுக்காக தங்கும இல்லங்கள் அமைத்தவரும் இவரே.

☐ அம்பேத்கர் 1947இல் விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் அமைச்சரவையில் நேருவின் விருப்பப்படி மத்திய அமைச்சரானார்.

☐ இந்தியாவில் முதல் 'மே' தினம் 1927ஆம் ஆண்டில் பம்பாய் நகரில்தான் கொண்டாடப்பட்டது.

☐ முதலில் வெளியிடப்பட்ட ஒரு ரூபாய் நாணயத்தின் எடை 180 கிராம். இதில் சுத்தமான வெள்ளி 165 கிராமும் மற்ற உலோகங்கள் 15 கிராமும் இருந்தன.

☐ உலக அளவில் முதன் முதலில் இத்தாலியில் தான் பத்திரிகைகள் கார்ட்டூன் படங்களை வெளியிட்டன.

☐ குண்ணம் முனுசாமி நாயகர் சரித்திர நூலையும், கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் ஆய்ந்து

'சாதிகள் சங்கிரசாரம்' என்ற நூலை எழுதினார். அந் நூலைப் படித்த வன்னியர்கள் குலப்பற்றுக் கொண் டார்கள். அவர்களில் குருசாமி ராயர் முதன் முதலில் 1871இல் கூடலூரில் வன்னிய குல க்ஷத்திரியர் சங்கம் அமைத்தார். அவர் தென் ஆற்காடு மாவட்டத்தில் பல ஊர்களில் வன்னியர் சங்கம் அமைத்து 'நாம் அரச குலத்தவர்' என்று முழக்கமிட்டார். பல ஊர்களுக்கு தூதனுப்பி சங்கம் அமைக்கும்படி செய்தார்.

☐ 'சூரிய வம்சம்' படத்தில் எடிட்டராக பணி புரிந்த நந்திலேடிதான் இந்தியாவிலேயே முதல் பெண் எடிட்டர்.

☐ சினிமா உலகில் முதன் முதலாக வழங்கப்படும் சாப்ளின் விருதினை பிரபல இயக்குநரான சத்திய ஜித்ரேக்கு வழங்கப்பட்டது. இந்த விருதினை சாப்ளினின் 11-ஆம் நினைவு தினத்தை ஒட்டி அவர் மனைவி ஓனா சாப்ளின் வழங்கினார்.

☐ தண்ணீருக்குள் முதல் பிரசவம் 1972இல் சோவியத் நாட்டில் நடந்தது. சோவியத் மருத்துவ வல்லுநர்கள் கருத்து: தாயின் கர்ப்பத்திலிருந்து புவி ஈர்ப்பு அற்ற தண்ணீருக்குள் குழந்தை பிறப்பதனால் குழந்தையின் உடம்பிலும் மூளையிலும் நல்ல முன் னேற்றம் உண்டாகும் என்பதாகும்.

☐ இன்று தொடர்கதைகளின் முடிவில் 'முற் றிற்று'-'முற்றும்' என்ற சொற்களை எழுதுகிறோம் அல்லவா? இதனை முதன் முதலில் எழுதிக் காட்டிய வர் இளங்கோ அடிகள்தான்.

☐ 1948ஆம் ஆண்டு முதல்தான் அன்னை தெரசா இந்தியாவின் குடிமகளாக மாறினார்.

☐ தமது நாடகங்களைப் பத்திரிகைகளுக்கு அறிமுகப்படுத்தத் தமக்கென பத்திரிகைத் தொடர்பு அதிகாரியை முதன் முதலில் நியமித்தவர் நடிகர், நாடகக் காவலர் மனோகர்தான். 1972இல் நேஷனல் தியேட்டர்ஸில் இத்திட்டம் அமலுக்கு வந்தது. அப்பதவி வகித்தவர் ராஜேஸ்வரி.

☐ தமிழ்ப்படங்களில் கதாநாயகனாக நடிக்கும் நடிகர்கள் தாங்களே பாட்டுப்பாடி வந்த காலம் மாறி, நடிகர்கள் வாய் அசைக்க பின்னணிப் பாடகர்கள் பாடும் முறை கொண்டு வரப்பட்டபோது நடிகர்களுக்கு முதன் முதலில் பின்னணி பாடியவர் புகழ்பெற்ற பாடகரான திருச்சி லோகநாதன்தான்.

☐ ஆங்கில மொழியில் உள்ள 'பிரிட்டானிக்கா என்சைக்ளோபீடியா' முதன் முறையாக சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

☐ தக்காளி முதன் முதலில் எந்த நாட்டில் பயிர் செய்யப்பட்டது? அயர்லாந்து நாட்டில்தான்.

☐ தமிழருக்குத் தொடர் ஆண்டு இல்லாத குறையை உணர்ந்த தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் ஆகியோர் 1921ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்தார்கள். தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு

முறையை ஏற்று 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும் 1972 முதல் தமிழ்நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ்நாடு அரசின் அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

☐ வளையத்தில் சாவி மாட்டும் வழக்கத்தை முதன் முதலில் கையாண்டவர்கள் ரோம் நாட்டினர். திருமணத்தின்போது தனது தகுதிக்கேற்ப உலோகத்தில் வளையம் செய்து அதில் ஒரு சாவியை மாட்டி மணமகன் பெண்ணிடம் கொடுப்பான். அந்த வளையத்தில் 'என் வீடு, மானம் இவற்றின் சாவியை உன்னிடம் அளிக்கிறேன்' என்று எழுதப்பட்டிருக்கும்.

☐ டெலிவிஷன் என்ற வார்த்தையை 1900ஆம் ஆண்டு பெர்ஸ்கி என்ற பிரெஞ்சுக்காரர் முதன்முதலில் பயன்படுத்தினார். டெலிவிஷன் பற்றிய தொழில் நுணுக்க விளக்கத்தினை 1909ஆம் ஆண்டு மாடர்ன் எலக்ட்ரானிக்ஸ் என்ற பத்திரிகையில் ஹ்யூகோ கெரன்ஸ் பேக் என்பவர் எடுத்து விளக்கினார்.

☐ முதன் முதலில் ஐந்து நட்சத்திர ஓட்டலான அசோகா ஓட்டல் 1956 அக்டோபர் 30இல் டில்லியில் தொடங்கப்பட்டது. யுனெஸ்கோ பிரதிநிதிகள் தங்குவதற்காக இது முதலில் கட்டப்பட்டது.

☐ பத்திரிகைகளில் குறுக்கெழுத்துப் போட்டி இப்போது பிரபலமாகி இருக்கிறது. அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது தெரியுமா? ஆண்டு 1924. முதன் முதல் ஆரம்பித்த பத்திரிகை 'லண்டன் சண்டே

எக்ஸ்பிரஸ்'. இது இங்கிலாந்திலிருந்து வெளியானது.

☐ மூதறிஞர் இராஜாஜி முதன் முதலாக 1921 டிசம்பரில் மூன்று மாதம் சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது சிறை அதிகாரிகள் 'சி' வகுப்பு கைதி என வகைப்படுத்தினார்கள். 'சி' வகுப்பு என்றால் எழுதப் படிக்கத் தெரியாத கைதி எனப் பொருளாம்.

☐ 'வாட்ஸன்! தயவு செய்து இங்கே வரவும்' இதுவே உலகின் முதன் முதலில் பேசப்பட்ட தொலைபேசிச் செய்தி. செய்தியைப் பேசியவர் தொலைபேசியைக் கண்டுபிடித்த அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல். செய்தியைக் கேட்டவர் வேறு ஒரு தளத்தில் இருந்த கிரஹாம்பெல்லின் உதவியாளர் தாமஸ் வாட்ஸன்.

☐ முன்னாள் கர்நாடக முதல்வரும் ஜனதாதள தலைவருமான ராமகிருஷ்ண ஹெக்டே-முதன் முதலாக ஒரு கன்னடப் படத்தில் நடிக்கிறார். படத்திலும் இவர் ஒரு முதலமைச்சர் ரோலில்தான் வருகிறார். படத்தின் பெயர்; 'மரணமிருதங்க'.

☐ 1887ஆம் ஆண்டுதான் முதலில் மூக்குக் கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்டது.

☐ உலகின் முதல் நீர்மூழ்கி ரோபோ இயந்திரம் 'அச்வா எக்ஸ்ப்ளோரர்-1000' என்னும் பெயருடையது. இந்த நீர்மூழ்கி ரோபோ ஆழ்கடல் ஆராய்ச்சியில் 1000 மீட்டர் ஆழத்திற்குக் கீழே செல்லும் பைப்

லைன்களைப் பரிசோதிக்க உதவும். கடலின் தரைப்படுக்கையை ஆராய்ந்து தகவல்களைத் திரட்டித் தரவல்லது இந்த நீர்மூழ்கி ரோபோ.

☐ விண்வெளிக்கு முதன் முதலில் ஜெல்லிஃபிஷ் என்னும் ஒருவகை மீன்களையும் சில வெள்ளை எலி களையும்தாம் அனுப்பிப் பரிசோதித்தார்கள். பின்னர் மனிதர், உயிரினங்களை அனுப்பினால் பத்திரமாகப் பூமிக்குத் திரும்பி வருவார்களா என்று விஞ்ஞானிகள் உறுதி செய்து கொண்டவிதம் இதுதான்.

☐ ஜப்பானின் முதல் அரசரின் பெயர் ஜிம்மு டென்னோ. இவரது பரம்பரையைச் சேர்ந்த அகி ஹிட்டோ 125ஆவது அரசர்.

☐ சுரேஷ் ஹெச் காம்தார் என்பவர் 29ஆம் வயதில் முதன் முதலாக இரத்ததானம் செய்ய ஆரம் பித்தார். 1989ஆம் ஆண்டு தம் 56ஆம் வயதில் 100-ஆம் தடவையாக புதுடெல்லி ஜே.பி. மருத்துவ மனையில் இரத்ததானம் செய்வதில் 'செஞ்சுரி' போட்ட முதல் இந்தியர் இவர்தான்.

☐ கற்பழிப்பு வழக்கில் ஆறு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு இண்டியானா சிறையில் இருக்கும் குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் 'இனி மேல் குத்துச்சண்டையில் ஈடுபடப் போவதில்லை' என சிறையிலிருந்து கொடுத்த முதலாவது பேட்டியில் கூறியுள்ளார்.

☐ ஒரு கதாபாத்திரத்தின் உணர்ச்சிகளை 'க்ளோசப்' காட்சிகளின் மூலம் ரசிகர்களுக்குத் தெளிவாக உணர்த்த முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர், ஹாலிவுட் டைரக்டர் கிரீஃபத். முதன் முறையாக 'க்ளோசப்' ஷாட்டுகளைக் கண்டவுடன் மக்கள் பயந்து கூச்சலிட்டனர். ஏனென்றால் அதற்கு முன் உடலில்லாத தலையை மட்டும் அவர்கள் கண்டதில்லை.

☐ தமிழ் நாட்டிலேயே முதன் முதலாக மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. வகுப்புக்கு ஜோதிடத்தைப் பாடமாக வைத்திருக்கிறார்கள்.

☐ நிலங்களைப் பற்றிப் படம் வரைவதில் ஜெர்மனிதான் பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல், முதல் இடத்தில் இருந்து வருகிறது. இந்தியாவைப் பற்றிய வரை படங்கள் கல்கத்தாவில் உள்ள சர்வே இலாக்காவினால் தான் முதலில் தயாரிக்கப்பட்டது.

☐ முதன் முதலில் ரைட் பிரதர்ஸ் நார்த்கரோலினா என்ற அமெரிக்கப் பகுதியில் வானத்தில் பறந்து உலக அதிசயம் படைத்தார்கள் என்பது தெரியும். இவர்கள் முதலில் பறந்தது 12-விநாடிகள் மட்டுமே.

☐ 1984 ஆம் ஆண்டு அமெரிக்கக் கடற்படையில் முதன் முதலாக இடம் பெற்றது தியோடர் ரூஸ்வெல்ட் என்னும் யுத்தக் கப்பல். இந்த விமானம் தாங்கிக் கப்பலில் 3200 பேர் பணி புரிகிறார்கள். இதில் உள்ள 16 அங்குலம் நீளமுள்ள ஏவுகணை (இந்த ஏவுகணை

யின் எடை 1400 கிலோ) 36. கி. மீ. தூரம் வரை பயணம் செய்து எதிரிகளின் கப்பலையோ, விண்ணில் பறக்கும் விமானத்தையோ தாக்கிச் சுக்கு நூறாக்க வல்லது.

□ திருப்பாவை அருளிய ஸ்ரீ ஆண்டாளின் பாடல் 'மார்கழித் திங்கள்' என்று மாணிக்கவாசகரின் முதல் எழுத்தைக் கொண்டு தொடங்குகிறது. மாணிக்க வாசகரோ தம் திருவெம்பாவையை ஆதியும் அந்த முமிலா என்று ஆண்டாளின் முதல் எழுத்தைக் கொண்டு தொடங்குகிறார். ஸ்ரீ ஆண்டாள் திருப் பாவையில் மார்கழி என்ற வார்த்தையைத் தனது பாடலின் முதல் அடியில் குறிப்பிட்டுள்ளார். மாணிக்க வாசகரோ திருவெம்பாவையில் மார்கழி என்ற வார்த்தையைத் தனது கடைசிப் பாடலின் கடைசி வரியில் குறிப்பிட்டுள்ளார்.

□ கொடியின் மதிப்பைக் காக்க உயிர்விட்ட முதல் தியாகி திருப்பூர் குமரன் தான்.

□ முதன் முதலில் சுதந்தரப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற முதல் பெண்மணி சரோஜனிதேவி, ஆண்டு 1921.

□ நாணயத்தில் முதன் முதலில் தலையை அச்சிட்டவர் அலெக்சாண்டர்.

□ அந்நியத் துணியைப் பகிஷ்கரித்து முதலில் தீயிட்டவர் வீரசாவர்க்கார்.

□ உலகம் முழுதும் பரவியுள்ள கூட்டுறவு இயக் கத்தைத் தோற்றுவித்தவர் சர். ராபர்ட் ஓவன். இவ்வியக்கம் 1850 இல் தோன்றியது. முதன் முதலில்

தோன்றிய சங்கம், இங்கிலாந்தில் உள்ள ராக்பேல் நெசவாளர் கூட்டுறவு சங்கமாகும்.

□ முதன் முதலில் ஒரு பெண்ணிற்கு அமைச்சர் பதவி தந்து கௌரவித்தது ரஷியாதான். லெனின் தலைமையில் அமைந்த சமூக நலத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார்- அலெக்ஸான்ட்ரா கொலான்டே. அது மட்டுமெல்ல, ஏழாண்டு கழித்து முதன் முதலாக அயல் நாட்டுத் தூதர் பதவி வகித்த முதல் பெண்மணியும் இவரே. சோவியத் யூனியனின் தூதராக, நார்வே நாட்டில் பணிபுரிந்து, உலகின் முதல் பெண் தூதர் என்ற சிறப்பைப் பெற்றவர்.

□ ஒலிம்பிக்கில் பேட்மிண்டன் விளையாட்டு இந்த (1992) ஆண்டு முதல்தான் முதல் முதலாக அறிமுகமாகியுள்ளது. அறிமுகப்படுத்திய இந்த ஆண்டில் தங்கப் பதக்கம் பெற்ற நாடு சீனா.

□ முதன் முதலாக பார்சிலோனா ஒலிம்பிக் விளையாட்டுகளில் பேஸ்பால் சேர்க்கப்பட்டது. பேஸ்பால் கியூபா நாட்டின் தேசிய விளையாட்டாகும். 1870 ஆம் ஆண்டிலிருந்து இந்த விளையாட்டு கியூபாவில் தழைத்தோங்குகிறது. பார்சிலோனாவில் பேஸ்பாலின் தக்கப்பதக்கத்தை கியூபா தட்டிச் சென்றது.

□ 1961 இல் இந்தியாவில் முதல் தேசிய விளையாட்டு இன்ஸ்டிடியூட் தொடங்கப்பட்டது. இதற்கு 'நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ்' தேசிய விளையாட்டு

இன்ஸ்டிடியூட் என்று பெயர். இது பஞ்சாப் மாநிலம் பாடியாலாவில் உள்ளது.

□ 15 ஆம் நூற்றாண்டில் விஜயநகரத்தில் வாழ்ந்த ஹரியக்கா என்ற பெண் தான் முதன் முதல் மல்யுத்தம் செய்த பெண் ஆவாள். மல்யுத்தம் செய்யும் போதே அவள் இறந்து போனாள் என்பது குறிப் பிடத்தக்கது.

□ கால் பந்தாட்டம் முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் டில்லியில் 1951 ஆம் ஆண்டு நடந்த போது ஈரானை எதிர்த்து இந்தியா ஆடியது. மேவ லால் என்பவர் இந்தியாவிற்காக ஒரே ஒரு கோல் போட்டு இந்தியாவிற்குத் தங்க மெடல் பெற்றுத் தந்தார்.

□ பாட்மின்டன் விளையாட்டு இங்கிலாந்தில் 1870 ஆம் ஆண்டு முதன் முதலில் விளையாடத் தொடங்கப்பட்டது என்கிறார்கள் ஆராய்ச்சியா ளர்கள். இந்த விளையாட்டுக்குரிய விதிமுறைகள் அதற்குப்பின் பல வருடங்களுக்குப் பிறகு இந்தியா வில் அதுவும் புனேயில் தான் வகுக்கப்பட்டனவாம்.

□ டென்னிஸ் பந்தயங்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் நடக்கின்றன. அதற்குயார் சட்டங்களை முதலில் கொண்டு வந்தவர்? வால்டர் விங்ஃபீல்ட் என்பவர்தான்.

□ சதுரங்க விளையாட்டை முதன் முதலில் கி. பி. 570 ஆம் ஆண்டில் இந்தியாதான் அறிமுகப்

படுத்தியது. ஆனால் இன்று இந்த ஆட்டத்தில் முன் நிற்கும் நாடு சோவியத் நாடுதான்.

☐ உலகம் முழுவதும் உள்ள விலங்கு, நாய். மனிதர்களுடன் ஒட்டிக் கொண்டு முதன் முதலில் வீட்டு விலங்காக மாறியதும் நாய்தான்.

☐ ராக்கெட்டில் பயணம் செய்து விண்வெளிக்கு சென்ற முதல் நாய் 'லைக்கா' என்ற பெயரைக் கொண்டது. இந்நாய் ஸ்புட்னிக் II - என்ற செயற் கைக் கோளில் 1957 நவம்பர் 3ஆம் தேதி விண்வெளிக் குச் சென்றது.

☐ 1992 இல் நடைபெற்ற ஒலிம்பிக்கில் சீனா முதல் இடத்தைப் பெற்றது. ஆனால் சீனா முதன் முதலாக 1984 இல் தான் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டது.

☐ மகளிர் நீளம் தாண்டுதல் போட்டியில் உலகிலேயே முதன் முதலாக 7 மீட்டர் நீளம் தாண்டி சாதனை படைத்தவர் ரஷ்யாவைச் சேர்ந்த வில் ஜெல்மினா பர்தாவுஸ் கெனெ என்பவர். இவர் 1978 ஆகஸ்டில் இச்சாதனையைச் செய்தார்.

☐ வரலாற்றில் இடம் பெற்ற முதல் வீரப் பெண் மணி கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் எகிப்தை ஆண்ட ராணி ஹாட் ஷிப்சட் என்பவர்தான்.

☐ குத்துச் சண்டைப் போட்டியில் மிகவும் உயரிய விருதை முதன் முதலில் பெற்ற கறுப்பு

மனிதர் டெக்ஸான் குத்துச் சண்டை வீரர் ஜாக் ஜான்சன் ஆவார். 1906 டிசம்பர் 22இல் ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடந்த ஹெவிவெய்ட் போட்டியில் டாமி பார்னைஸை தோற்கடித்து இப் புகழைப் பெற்றார்.

☐ காந்தியின் பிறந்த தினமான அக்டோபர் 2 ஆம் தேதியை அமெரிக்காவின் தேசிய தினமாகக் கொண்டாட 1988 ஆம் ஆண்டு முதல் உத்தரவு அமலுக்கு வந்தது. இதை சட்டப் பூர்வமாகக் கொண்டு வந்தவர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரேகன்.

☐ வெள்ளை மாளிகையில் முதன் முதலாக வசிக்க ஆரம்பித்த ஜனாதிபதி ஜான் ஆடம்ஸ், 1800 ஆம் ஆண்டிலிருந்து வசிக்க ஆரம்பித்தார்.

☐ முதன் முதலில் இரத்த ஓட்டத்தைக் கண்டு பிடித்தவர் டாக்டர் ஹார்வி. பிறந்த நாள் முட்டாள் களின் தினமான ஏப்ரல் முதல் நாளில் தான்.

☐ முதன் முதலில் வீரமாமுனிவர்தான் லத்தீன் மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்தார்.

☐ உணவில் உப்பை அதிகம் சேர்த்துக் கொள்ளும் நாடுகளில் ஜப்பான் முதலிடம் வகிக் கிறது.

☐ 'பாக்சிமிலி' முறையின் மூலம் முதன் முதலாக பத்திரிகை அச்சிட்ட நிறுவனம் இந்து.

☐ உலகின் முதல் பேசும் படமான 'ஜாஸ் சிங்கர்' என்ற படத்தில் இடம் பெற்ற முதல் வசனம் என்ன தெரியுமா? 'நீங்கள் இதைப்போல் எதையும் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். எனவே இந்தப் பக்கம் கவனத்தைச் செலுத்துங்கள்' என்பதுதான்.

☐ குடும்ப நலத்திட்டத்தின் கீழ் கருத்தடை ஆபரேஷன் செய்து சாதனை நடத்திய மாநிலம் மராட்டியம். இந்த மாநிலத்தில் 34 லட்சத்து 78 ஆயிரம் கருத்தடை ஆபரேஷன்கள் நடத்தப் பட்டுள்ளன.

☐ முதன் முதலில் பாறைகளை வெட்டி சமப் படுத்தி கடற்கரைக் கோயிலைக் கட்டியவன் நரசிம்ம வர்மன்தான் (கி. பி. 700-728)

☐ 1909 இல் முதன் முறையாக நீச்சலுடை அணிந்து நீச்சலடிக்கச் சென்ற ஆனெட் செஸ்வர் மான் என்ற பெண்மணி ஆபாசமாகத் தோற்ற மளித்தற்காகக் கைது செய்யப்பட்டார்.

☐ அமிதாப்பச்சனின் முதல் படம் 'சாத் இந்துஸ் தானி'.

☐ அயர்லாந்து நாட்டில் நடைபெற்ற படகுப் போட்டி விழாவின் விவரங்கள்தான் முதன் முதலாக கம்பியில்லாத் தந்தி மூலம் 'டப்ளின் எக்ஸ்பிரஸ்' என்ற செய்தித்தாளுக்கு அனுப்பப்பட்ட செய்தி யாகும்.

☐ கண் மையை முதன் முதலில் எகிப்து நாட்டு மக்கள்தான் பயன்படுத்தினார்கள். சூரிய ஒளி பட்டால் கண் பாதிக்கப்படுமோ என்று பயந்து இவர்கள் தங்கள் கண் இமைகளுக்கு கருப்பு நிறத்தில் ஒருவகை வண்ணத்தைப் பூசினார்கள்.

☐ முதன் முதலாக கைத்துப்பாக்கியைக் கண்டு பிடித்தவர் கார்மினெலியோ விட்டெலி என்ற இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்தான் 1540 ஆம் ஆண்டு கண்டு பிடித்தார்.

☐ முதன் முதலில் திராட்சைப் பழங்கள் காஸ்ப்பியன் கடற்கரைப் பகுதிகளில்தான் பயிரிடப் பட்டன.

☐ துருக்கியர்களே 1854-56 ஆம் ஆண்டுகளில் முதன் முதலில் சிகரெட் பிடிக்கத் தொடங்கியவர்கள்.

☐ முதன் முதல் சீனாவில்தான் நாடகம், இசை நடனத்துடன் தொடங்கியது.

☐ மழையில் நனையாதவாறு இன்று தடுக்கப் படும் 'மழைக் கோட்' டை முதன் முதலில் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த சார்லஸ் மக்கின்டோஷ் என்பவரே கண் டறிந்தார்.

☐ நம் நாட்டில் முதன் முதலாக புகை வண்டி வந்தபோது அதைப் பற்றி முதலில் பூவை கலியாண

சுந்தர முதலியாரும் அவருடைய மாணவராகிய பேறை சகந்நாதபிள்ளை என்பவரும்தான் பாடல் பாடினர்.

☐ தேநீர் தயாரிப்பதற்கான தேயிலை இந்தியாவில் முதல் முதலாக 1604 ஆம் ஆண்டில் அக்பரின் ஆட்சிகாலத்தில்தான் அறிமுகம் ஆனது.

☐ கன்னட மொழியின் முதல் நூல் எனப்படுவது, 'கவிராஜ மார்க்கம்' என்பதாகும். இது கி.பி. 850-இல் தோன்றியது.

☐ தெலுங்கில் முதலில் தோன்றிய நூல் நன்னைய பட்டர் எழுதிய மகாபாரத மொழி பெயர்ப்பாகும். காலம் கி.பி. 1019-1061.

☐ மலையாள மொழியின் முதல் நூல் எனப்படுவது 'உன்னுன்னீலி சந்தேசம்' என்பதாகும். இது பதினான்காம் நூற்றாண்டில் வெளிவந்ததாகும்.

☐ முதன் முதலாக வானொலியில் வர்த்தக ஒலிபரப்பு ஆரம்பமானது 1922-ஆம் ஆண்டில்; அமெரிக்காவில்தான்.

☐ அட்லாண்டிக் கடலை முதன் முதலாகப் பலூன் மூலம்தான் கடந்தார்கள். பென் அப்ரூஸ• என்பவர் தலைமையில் மூவர் அடங்கிய குழு ஒன்று 1978-இல் அமெரிக்காவிலிருந்து பலூனில் புறப்பட்டு அட்லாண்டிக்கைக் கடந்து பாரீஸில் நல்ல முறையில் தரை இறங்கியது.

☐ முதன் முதலாக டாக்டர் ராமாமிர்த ரங்க நாதன் புத்தகங்களை மாட்டு வண்டியில் அடுக்கி எடுத்துக் கொண்டு ஒரு குட்டி நூலகத்தை அமைத்துக் கொண்டு, வீதிகள் தோறும் சென்று வீடுகள் தோறும் புத்தகம் படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியவர். இவர் நடத்திய நடமாடும் நூலகத்தின் மூலம்தான் நாடெங் கிலும் நூலகங்களை உருவாக்க அப்போதிருந்த அரசு கற்றுக் கொண்டது. இவர் மன்னார்குடியைச் சேர்ந் தவர்.

☐ 1818ஆம் ஆண்டில் ஒரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி என்ற இங்கிலாந்து நிறுவனம் இந்தியாவில் முதல் இன்சூரன்ஸ் கிளையைத் தொடங்கியது.

☐ 1870ஆம் ஆண்டு பம்பாயில் 'பம்பாய் மியூச் சுவல்' என்ற முதல் இந்திய இன்சூரன்ஸ் கம்பெனி தொடங்கப்பட்டது.

☐ 1911 டிசம்பர் 27ஆம் தேதி கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில்தான் 'ஜனகணமன' பாடலை முதன் முதலாக பாடினார்கள். 1950 ஜனவரி 24ஆம் தேதி நமது தேசிய கீதமாக அங்கீகாரம் பெற்றது.

☐ முதன் முதலில் விமானம் மூலம் தபால்களை எடுத்துச் சென்று டெலிவரி செய்யும் முறையை அறி முகம் செய்த பெருமை நம் இந்தியாவிற்கே உண்டு.

☐ நேரு அமைத்த இடைக்கால அரசின் கல்வி அமைச்சராகவும் இருந்தவர் மௌலானா அபுல்கலாம்

ஆசாத். இவர் இப்பதவியில் பதினொரு ஆண்டுகள் சிறந்த பணியாற்றினார்.

☐ சோதிடம் பார்க்கும் பழக்கம் முதன் முதலில் பாபிலோனியாவில் தோன்றியது.

☐ இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திரப் பிரசாத்.

☐ திருக்குறளை முதன் முதலில் ஓலைச் சுவடியிலிருந்து நூல் வடிவில் வெளியிட்டவர் பிரிட்டிஷ் சிவில் சர்வீஸ் அதிகாரி எலிஸ் துரை. வெளிவந்த ஆண்டு-1825.

☐ இந்தியாவில் முதன் முதலில் தொழிற்சங்கம் தோன்றியது சென்னையில்தான். வாடியா அவர்களும் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களும் 27-4-1918இல் 'மதராஸ் லேபர் யூனியன்' என்ற பெயரில் இதைத் தொடங்கினர்.

☐ துணி துவைக்கும் இயந்திரத்தை முதன் முதலில் ஹார்லீ மெஷின் கம்பெனியார் கண்டுபிடித்தனர். நாடு அமெரிக்கா. ஆண்டு 1907.

☐ உலகிலேயே மிக உயரமான எவரெஸ்டுக்கு மேலே முதன் முதலாக ஒரு விமானம் பறந்தது 1933ஆம் ஆண்டிலேதான். அந்த வருடம் ஏப்ரல் 3ஆம் தேதி அன்று பிளைட் லெப்டினண்ட் டி.எப். மெக்கின்டயர் என்பவர் ஒரு வெஸ்ட்லாண்ட் வாலஸ்

ரக விமானத்தை எவரெஸ்ட் சிகரத்துக்கு மேலே ஓட்டிச் சென்றார்.

☐ உலகின் முதலாவது பாட்டரியால் இயங்கும் கார் ஒன்றுண்டு. 1899இல் பிரான்சில் தயாரிக்கப் பட்ட இது மணிக்கு 105 கி.மீ. வேகத்தில் சென்றதாம்.

☐ பாரசூட்டில் குதித்த முதல் இந்தியப் பெண் காப்டன் சந்திரா.

☐ முதல் பெண் விமானி மிஸ். யேல் பிங்கல் ஸ்டீன். இவர் இஸ்ரேல் நாட்டவர்.

☐ முதன் முதலில் கலைக் களஞ்சியம் வெளி யிட்ட நாடு பிரான்ஸ்.

☐ சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலில் தமிழில் ஆராய்ச்சி செய்து பிஎச்.டி. பட்டம் பெற்றவர் டாக்டர் சுப்பிரமணிய சாஸ்திரி ஆவார். இவர்தான் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

☐ 1963இல் முதன் முதலாக மரம்நடும் இயக்கம் சிங்கப்பூரில் ஆரம்பமானது. இன்று அங்கு நான்கு பேருக்கு ஒரு மரம் வீதம் மரங்களின் எண்ணிக்கை இருக்கிறது.

☐ இப்போது தினசரிப் பத்திரிகைகள் மற்றும் வார, மாத இதழ்கள் முக்கிய செய்திகளைப் பெரிய எழுத்துகளில் (போஸ்டர்) அடித்துத் தொங்கவிடு

கிறார்கள். இந்த முறையை முதன் முதலில் அமல் படுத்திய பத்திரிகை அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'சண்டே ஓர்ல்ட்' என்ற வாரப் பத்திரிகையாகும். 1895ஆம் ஆண்டு இது வழக்கத்திற்கு வந்தது.

☐ பதவியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்குரிய ஓய்வூதிய முறையை உலகில் முதன் முதலில் கொண்டு வந்தவர்-ஆங்காங்கே பிரிந்து கிடந்த ஜெர்மனியை ஒன்றாக்கி வலிமைமிகு நாடாக்கிய-பிஸ்மார்க்தான். ஆண்டு 1889.

☐ முதன் முதலாக 'கரக ஆட்டக்கலை பயிற்சிப் பள்ளி' ஒன்றை உருவாக்கியவர் கலைமாமணி எம்.எஸ். அங்குப்பிள்ளை என்பவர்தான். 1942இல் மதுரையில் இப்பள்ளியைத் தொடங்கினார். இங்கே 250 மாணவர்களுக்குக் கரக ஆட்டம் கற்பித்துள்ளார். பலர் சேர்ந்தாடும் குழு நடனம் முதன் முறையாக இங்கேதான் தொடங்கியது. பெண்களை முதன் முதலில் கரக ஆட்டத்திற்குத் தயார் செய்த பெருமை இந்த அங்குப் பிள்ளையைச் சேரும்.

☐ அறுவை சிகிச்சையில் முக்கியமாக இடம் பெறுவது தையல் முறை. இந்தத் தையல் முறையை முதன் முதலில் கண்டுபிடித்த டாக்டர் ஆம்ப்ரூஸ் பாரே முதலில் ஒரு முடிதிருத்தகத்தில்தான் பணியிலிருந்தார்.

☐ விமானத்தை முதன் முதலாக போரில் பயன் படுத்திய நாடு இத்தாலிதான். பயன் படுத்திய ஆண்டு 1911.

☐ இன்று கைப்பை, ஷூ, பேண்ட் போன்றவற்றில் பயன்படுத்தும் 'ஜிப்'பை முதன் முதலில் கண்டு பிடித்தவர் அமெரிக்காவில் உள்ள சிகாகோவை சேர்ந்த விட்கோம்ப் எல். ஜட்ஸன் என்பவரே.

☐ சோவியத் யூனியனும் ஜப்பானும் இணைந்து சோயுஸ் டி.எம்-11 என்ற விண்கூட்டில் ஜப்பானிய பத்திரிகையாளர் டோயோ ஹிரோ அகியாமா, ரஷிய விண்வெளி வீரர்கள் விக்டர் அக்ஃபன்ஸ்யேல், மூசா மனோரோவ் ஆகிய மூவரும் சேர்ந்து அனுப்பப்பட்டு உள்ளனர். ஜப்பானியப் பத்திரிகையாளர் செல்வது மூலம் ஜப்பானியர் ஒருவர் விண்வெளிப் பயணம் முதல் முறையாக மேற்கொண்டுள்ளார். விண்வெளிக்கு பத்திரிகையாளர் சென்றிருப்பது இதுதான் முதல் முறை.

☐ இயந்திர மனிதனை ரோபோ என்ற வார்த்தையால் அழைக்கிறார்கள். இந்த ரோபோ என்ற வார்த்தை முதன் முதலாக 1917இல் கார்ல் ஜெபக் என்ற விஞ்ஞானியால்தான் கையாளப்பட்டது.

☐ இந்தியாவில் முதல் மிதக்கும் பழுதுபார்க்கும் கப்பல் நிலையம் சென்னை துறைமுகத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது.

☐ இந்தியா சொந்தமாகத் தயாரித்துள்ள முதல் எண்ணெய்க் கப்பலின் பெயர் 'விபூதி' என்பதாகும். இது 1990இல்தான் தயாரிக்கப்பட்டது.

□ 21 வயதான அஞ்சலி ராஜகோபால் இந்தியாவின் முதல் கிரிக்கெட் பெண் அம்பயர்.

□ இந்தியாவில் முதன் முதலில் ஐ.ஏ.எஸ். தேறிய பெண்மணி சிரல்லாகி ரேவல்.

□ சினிமா துறையினருக்கு வழங்கப்படும் தாதா சாகேப் பால்கே விருது முதலில் தேவிகாராணிக்கு வழங்கப்பட்டது.

□ ஆஸ்கார் விருது பெற்ற ஒரே இந்தியர் பானு அத்தையா.

□ இந்தியாவில் முதன்முதலில் குளிர்சாதன ரயில் பெட்டி இணைக்கப்பட்டது 1917இல்தான். பம்பாய்-டெல்லி எக்ஸ்பிரஸில் இது இணைக்கப்பட்டது.

□ இந்தியாவில் நரம்பு அறுவை சிகிச்சைத் துறை முதன் முதலில் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் தான் ஏற்படுத்தப்பட்டது.

□ 'ஸ்நூக்கர்' விளையாட்டு இந்தியாவில்தான் தோன்றியது. 1975ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்த இங்கிலாந்துப்படை அலுவலர்கள் முதன் முதலில் இந்த விளையாட்டை விளையாடினர்.

□ உலகைச் சுற்றும் முதல் விமான சர்வீஸ் அமெரிக்காவின் 'பான்ஆம்' விமான நிறுவனம் 1947 இல் தொடங்கியது.

☐ முதன் முதலில் குடைவரைக் கோயிலைக் கட்டியவர் அசோகர். அதற்கு 'பராபர்' என்று பெயர்.

☐ இந்தியாவில் முதல் ஊராட்சி மன்றம் தொடங்கிய மாநிலம் ராஜஸ்தான்.

☐ தொல்பொருள் காட்சியகம் முதன் முதலில் இந்தியாவில் தொடங்கப்பட்ட இடம் கல்கத்தா. ஆண்டு 1814.

☐ விமானத்தில் பணிப்பெண்களை முதன் முதலாக அமர்த்திய நாடு அமெரிக்கா. ஆண்டு 1930.

☐ தன் வரலாற்றை கவிதையில் எழுதிய முதல் விடுதலை வீரர் உலகிலேயே கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.தான். ஆங்கிலேய ஆட்சியில் அதை வெளியிட யாரும் முன்வரவில்லை. 36 ஆண்டுகளுக்குப் பின் அது நூல் வடிவாக வெளிவந்தது.

☐ இந்தியாவிலேயே முதல் முறையாக இசைக்காக தனியே நான்காண்டு பட்ட வகுப்புகள் நடத்திப் பட்டம் வழங்கிய பெருமை அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரிக்கே உண்டு.

☐ மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஒல்டன் பர்க் என்பவர் 33 மீட்டர் நீளமான காகிதச் சுருளில் சொற்புதிர் ஒன்றைத் தயாரித்து உள்ளார். இதில் குறுக்காக 7,412 வினாக்களும், நெடுக்காக 8,223 வினாக்களும் உள்ளன. இதுதான் உலகத்தின் மிக நீண்ட சொற்புதிராகும்.

☐ டச்சு மேற்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த பீட்டர் மிஜாட் என்பவர் 1626இல் பழங்குடிகளிட மிருந்து இத்தீவை (மன்ஹாட்டன்) 24 டாலர் மதிப் புள்ள துணிமணிகளை விலையாகக் கொடுத்து வாங்கி னார். நியூ ஆம்ஸ்டெர்டாம் என்று அதற்குப் பெய ரிட்டு-அதன் முதல் கவர்னராகவும் அவரே இருந்தார்.

☐ காந்தியடிகளைப் பற்றி முதன் முதலாகச் செய்தி வெளியிட்ட இதழ் சுதேசமித்திரன். 27.6.1902 இதழில் வெளிவந்த செய்தியே அது.

☐ இந்தியாவின் முதல் நாடாளுமன்ற சபா நாயகர் ஜீ. வி. மாவ்லங்கர்.

☐ சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை.

☐ உலகிலேயே முதன் முதலாக ஒரு நாட்டின் ஜனாதிபதியான பெண்மணி மரியா பெரான். அர்ஜென்டைனா நாட்டைச் சேர்ந்தவர்.

☐ உலகில் முதல் கலங்கரை விளக்கம் அலெக் சாண்டிரியா வளைகுடாவில் கி.மு. 300இல் டாலமி என்ற மன்னரால் எழுப்பப்பட்டது.

☐ மனிதன் முதன் முதலாகக் கண்டுபிடித்த போக்குவரத்து வாகனம் எது என்றால் படகு. காரணம் சாதாரண மரக்கட்டையில் மிதந்து சென்ற பிறகே கப்பலைக் கண்டுபிடித்தான். அதற்குப் பிறகு

தான் நிலத்தில் ஓடும் முதல் கட்டை வண்டியைக் கண்டுபிடித்தான். உலகைச் சுற்றி வந்த முதல் கப்பல் விக்டோரியா. இதில் சென்றவர் மெகெல்லன்தான்.

☐ க்யூவில் நிற்கும் பழக்கம் இங்கிலாந்தில்தான் முதன் முதலாக நடைமுறைக்குக் கொண்டு வரப் பட்டது.

☐ உலகில் உள்ள மிகப் பெரிய கல்பாலம் சீனா வில் உள்ளது. இதன் நீளம் 2070 மீட்டராகும். 800 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இப்பாலம் கி.பி. 1138இல் கட்டத் தொடங்கப்பட்டு 14 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டதாம்.

☐ முதன் முதலாக ஒரு நடிகருக்கு என்று ரசிகர் மன்றம் ஏற்பட்டது நம் நாட்டில் இல்லை. ஆங்கிலேய நடிகர் 'லெஸ்லி வாலர்' என்பவருக்குத்தான் 1902 ஆம் ஆண்டு முதன் முதலாக இங்கிலாந்தில் ரசிகர் மன்றம் ஏற்பட்டது.

☐ இந்திய ரயில்வே வரலாற்றில் ஒரு பெண் முதன்முதலாக ரயில்வே எஞ்சின் டிரைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். அந்தப் பெண்ணின் பெயர் ஜுவாலா. வயது 24 கேரளா மாநிலத்தில் வைப்பின் கரையில் பள்ளிப் புரத்தைச் சேர்ந்தவர்.

☐ ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தையை சீன மருத்துவர்கள் இரண்டு மணி நேரப் போராட்டத் திற்குப் பின் பிரித்தெடுத்தனர். ஆனால் பத்து

நாள்களுக்குப்பின் ஒரு குழந்தை இறந்து விட்டது. சீனாவில் முதன் முதலாக இரட்டையர்களைப் பிரித்தெடுத்த நிகழ்ச்சி இதுதான்.

☐ இந்தியாவில் முதன் முதலாக விமானத்தில் பயணம் செய்தவர் சி. வி. கிருஷ்ணசாமி செட்டியார் என்ற தமிழர்தான். அவர் பயணம் செய்த ஆண்டு 1920.

☐ இந்தியாவில் முதன் முதலாக கிராமபோன் ரிகார்டுகள் 1903 இல் தான் வந்தன.

☐ முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் 1929 இல் தான் முதன் முதலாக தென்னாட்டிற்கு வந்தார்.

☐ நீதி மன்றத்தில் நேரடியாக ஆஜரான முதல் இந்தியப் பிரதமர் திருமதி. இந்திரா காந்திதான்.

☐ பம்பாயைச் சேர்ந்த டாக்டர் திருமதி சாரதா ஜே. செனவாய் என்பவர் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படுபவர்களுக்குத் தேவைப்படும் காப்பு மருந்தைத் தயாரித்துள்ளார். இந்தியாவில் இம்மருந்து தயாரிக்கப்படுவது இதுவே முதன் முறையாகும். இதுவரை இக்காப்பு மருந்து வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது.

☐ சென்னையில் முதன் முதலில் இலவசமாக ஏற்பட்ட கல்யாண மண்டபம் ஸ்ரீ சதுர்த்தி விநாயகர் மண்டபம்தான். அக்கல்யாண மண்டபத்தைத் தரும

சிந்தனையாளரான காலஞ்சென்ற நெல்சன்மாணிக்க முதலியார்தான் உருவாக்கினார்.

☐ முதன் முதலாக சமையல் கலைப் புத்தகத்தை எழுதியவர் ஷென்னூங் என்பவர்.

☐ முதன் முதலாக திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ஜி. யூ. போப்.

☐ முதன் முதலாக காவல் துறைப் பணிப் போட்டியில் சாதனை புரிந்தவர் குமாரி ரங்காத்தாள்.

☐ முதன் முதலாக சீனாவிற்கு வழங்கப்பட்ட பெயர் கெதே.

☐ முதன் முதலாக இயந்திர மனிதனைப் பயன் படுத்திய நிறுவனம் அமெரிக்காவில் உள்ள ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனிதான்.

☐ 1721 இல் தான் பிரிட்டனில் முதன் முதலாக பிரதமர் பதவி ஏற்படுத்தப்பட்டது. முதல் பிரதமராகப் பதவியேற்றவர் ராபர்ட் வால்போல்.

☐ பிரிட்டனில் முதன் முதலில் கூட்டணி ஆட்சியை அறிமுகப்படுத்தியவர் ஹென்றி பெல்ஹாம் என்பர். ஆண்டு 1743-1754.

☐ தாகூர் எழுதிய 'ஜனகணமன' பாடல் முதன் முதலாக தாகூர் நடத்திய 'தத்துவ போதனி' எனும்

பத்திரிகையில் பாரதவிதாதா என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டது.

☐ ஏ. என். கல்யாணசுந்தரம் 'சினிமா சாட்டை' என்ற பத்திரிகையின் ஆசிரியர். இவர் 'வாலிபர் சங்கம்' என்ற படத்தின் கதை, வசனம், பாடல்களை எழுதி இயக்கியதோடு- வெளியிடவும் செய்தார். ஒரு சினிமா பத்திரிகையாளர் கதை எழுதி இயக்கிய முதல் படம் இதுவே.

☐ முதன் முதலில் 'டப்பிங்' படத்திற்கு வசனம் எழுதியவர், குளத்து அய்யர். 'ராமராஜ்யம்' என்ற அந்தப்படம் நம் நாடு விடுதலை பெற்ற ஆண்டில் வெளி வந்தது.

☐ தமிழ்த்திரை உலகில் வசனத்துறையில் வழி காட்டியாக இருந்தவர் இளங்கோவன். முதன் முதலில் அவருக்குத்தான் சுவரொட்டியில் வசனம் இளங் கோவன் என்றுபெயர்வந்தது.

☐ முதல் கின்னஸ் புத்தகம் வெளிவந்த ஆண்டு 1955.

☐ நாம் அன்றாடம் பயன்படுத்தும் கத்திரிக் கோலை, முதன் முதலில் கண்டு பிடித்தவர் ஒரு விஞ்ஞானியோ, தொழில் நுட்ப மேதையோ அல்ல. லியோனார்-டாடாவின்சி என்ற புகழ் பெற்ற ஓவியர் தான்.

☐ 1946இல் வெளியான சாந்தாராமின் 'டாக்டர் கோட்னிஸ்' படம்தான் சீனாவில் எடுத்த முதல் இந்தியப்படம். இந்தப் படத்திற்குப்பின் எந்த ஒரு வெளிநாட்டுப் படமும் சீனாவில் படப்பிடிப்பு நடத்த அனுமதிக்கப்படவில்லை.

☐ இந்தியாவின் முதல் வண்ணப் படமான 'சைரந்திரி'யைத் தயாரித்தவர். சாந்தாராம்தான்.

☐ 'அமரித்மன்தான்' படத்தில் தான் இந்தியா விலேயே முதன் முதலாக குளோசப் ஷாட்டுகளும் தொலை தூர ஷாட்டுகளான ஜூம் ஷாட்டுகளும் சாந்தாராம் படத்தில்தான் பயன்படுத்தப்பட்டன.

☐ முதன் முதலில் போக்குவரத்துக் கட்டுப்பாடு விதியை நடை முறைக்குக் கொண்டு வந்த மன்னன் ஜூலியஸ் சீஸர்தான். அவர் இயற்றிய முதல் விதி முறை, ரோம் நகரில் பெண்கள் ரதங்களை ஓட்டக் கூடாது என்பதுதான்.

☐ முதன் முதலாக உளவு காட்டும் ஐசோ டோப்புகளை உயிரியல் துறையில் உபயோகித்தவர் ஜார்ஜ் ஹெவிஸி எனும் ஹங்கேரி நாட்டு பௌதிக நிபுணராவார்.

☐ உலகின் முதல் புத்தகம் கெல்டிக் இன மக்களின் மொழியான கெலிக் மொழியில்தான் 1567 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. முதலில் அச்சிடப் பட்டு வெளிவந்த இந்த நூலில் இறை வணக்கப்

பிரார்த்தனைப் பாடல்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தன.

☐ 1919 ஏப்ரல் 6ஆம் தேதிதான் முதன் முதலாக இநதியா முழுவதிலும் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதி வரை எல்லா நகரங்களும், கிராமங்களும் பரிபூரணமாக 'ஹர்த்தால்' நடத்தப்பட்டது.

☐ காந்திஜியின் கட்டுரைகளையும், புத்தகங்களையும் முதன் முதலில் புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டவர் சங்கு கணேசன்.

☐ காந்திஜியின் பெயரில் முதன் முதலாக பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தவர் டி. எஸ். சொக்கலிங்கம் என்பவர்தான்.

☐ அமெரிக்காவில் முதன் முதலில் மருத்துவப் பட்டம் பெற்றவர் எலிசபெத் பிளாக்வெல் என்ற பெண்மணியே. ஆண்டு 1849.

☐ முதன் முதலில் இந்தியாவில் வருமான வரி அமல்படுத்தப்பட்டது 1886இல்தான்.

☐ ஹாலிவுட் படத்தில் நடித்த முதல் இந்தியர் சாபுதான்.

☐ ஷேக்ஸ்பியரின் முதல் நாடகம் லவ்ஸ் லேபர்ஸ் லாஸ்ட்.

☐ 1842இல் ரெவ பெ. பெர்சிவல் என்ற பாதிரியார் 'தமிழகப் பழமொழிகள்' என்ற தலைப்பில் வெளியிட்ட நூலே தமிழில் வெளிவந்த முதல் பழமொழித் தொகுப்பாகும்.

☐ தமிழில் 1943இல்தான் முதன் முதலில் நாட்டுப்புறப் பாடல்களின் தொகுப்பு வெளிவந்தது. 'காற்றிலே மிதந்த கவிதை' என்பதுதான் அந்தப் புத்தகம். இத்தொகுப்பை மு. அருணாசலம் என்பவர் வெளியிட்டார்.

☐ 'ஜெய் ஜவான் ஜெய் கிசான்' என்ற உணர்ச்சி மிக்க கோஷத்தை முதல் முதலாக லால்பகதூர் சாஸ்திரிதான் எழுப்பினார்.

☐ முதன் முதலில் கம்ப்யூட்டர் டிக்கெட் பதிவு இந்தியாவில் புதுடில்லி ரயில்வே நிலையத்தில்தான் செய்யப்பட்டது.

☐ பிரிட்டனில்தான் முதலில் 19?2ஆம் ஆண்டில்தான் நாம் தற்போது பயன்படுத்தும் அஞ்சலட்டை அதாவது ஒரு பக்கத்தில் செய்திகள் எழுதவும், மறு பக்கத்தில் முகவரி எழுதவும் உருவாகிய அஞ்சலட்டை வெளியிடப்பட்டது.

☐ தனியே ஒரு படகில் உலகைச் சுற்றிவந்த முதல் பெண்மணி ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கே. காட்டக் என்பவர்தான். இடையில் கொஞ்சம் கூட நிறுத்தாமல் படகைச் செலுத்தி 189-நாளில் இந்த பூமியை ஒருமுறை வலம் வந்திருக்கிறார்.

☐ ஏனாட்சி திவாதியா என்ற பெண்மணி சிவில் என்ஜினியரிங் துறையில் மற்ற எவரும் பெற்றிராத பெருமையை அடைந்திருக்கிறார். மத்திய பிரதேசத்தின் நர்மதா சாகர் திட்டத்திற்கும், குஜராத்தின் சர்தார் சரோவர் திட்டத்திற்கும் ஏனாட்சிதான் முக்கிய இன்ஜினியர். இது போன்ற பெரிய திட்டங்

களில் ஓர் இந்தியப் பெண்மணி முக்கியப் பொறுப் பேற்றிருப்பது இதுவே முதல் முறையாம்.

☐ இந்தியாவைப் பற்றிய முதல் தேச வரை படம் 1752இல் பி. ஆன்வில் என்ற பிரெஞ்சுக்காரரால் வெளியிடப்பட்டது.

☐ இந்தியாவிலேயே முதன்முதலாக பி.சி. ராய் விருது பெற்ற பெண் என்ற பெருமையைப் பெற்றவர் டாக்டர் லலிதா காமேஸ்வரன். மேலும் சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல் பெண் டீனும் இவர் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

☐ தென்னகத்தில் முதல் விமான ஓட்டுநர் பயிற் சியை முடித்த முதல் பெண் என்ற பெருமையைப் பெறுகிறார் குமாரி பிரீதி சுந்தர். விமான ஓட்டுநர் சான்றிதழ் பெறுவதற்கு 250 மணி நேரமாவது பறந் திருக்க வேண்டும். இவரோ 276 மணி நேரம் பறந் திருக்கிறார். இவர் பயிற்சியை முடிக்கும்போது வயது 26. இவர்தான் தமிழகத்தின் முதல் 'பெண் பைலட்'.

☐ கவிஞர் கண்ணதாசனின் முதல் கதை திருச்சி யிலிருந்து வெளிவந்த பத்திரிகையான 'கிரகலட்சுமி' யில் வெளிவந்தது. அவர் எழுதிய திரைப்பாடல் இடம் பெற்ற முதல் படம் ஆதித்தன் கனவு. அவர் 16 வயதில் எழுதிய முதல் கவிதை 'அவள்' எனும் தலைப்பில் 1944இல் 'திருமகள்' இதழில் இடம்பெற்றது. அவரின் முதல் கவிதைத் தொகுதி சென்னை தியாகராயர் கல்லூரியில் வெளியிடப்பட்டது. அவ் விழாவில்

எம்.எஸ். விஸ்வநாதன்-ராமமூர்த்தியின் இன்னிசை நிகழ்ச்சியும் முதன்முதலாக திறந்த வெளியில் அன்று தான் அரங்கேற்றப்பட்டது.

☐ கவிஞர் கம்பதாசன் முதன்முதலாக 'சீனிவாச கல்யாணம்' என்ற படத்திற்குத்தான் பாடல் எழுதினார். 1930இல் முதன் முதலாக அவர் நடித்த படம் 'திரௌபதி வஸ்திராபரணம்'. 1941இல் கவிஞரின் முதல் கவிதைத் தொகுதி 'கனவு' என்ற பெயரில் வெளிவந்தது.

☐ தமிழ் எழுத்தாளர் மாநாடு 1948இல் டி.எஸ். சொக்கலிங்கம் தலைமையில் முதன்முதலாக கோவையில் நடந்தது.

☐ இந்த ஆண்டு (1992) இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த டெர்ரிக் வால்காட் என்பவர். 24 கவிதைகள் கொண்ட இவரது முதல் கவிதைத் தொகுப்பு, இவரது 18வது வயதில் வெளிவந்தது.

☐ இந்தியாவிலேயே முதல் முதலாக பிசினஸ் கருத்தரங்கங்கள் நடத்துவதற்கென்று பெரிய அளவில் ஒரு மையம் கோவாவில் திறக்கப்பட்டுள்ளது.

☐ யானையை முதன் முதலாக இங்கிலாந்து நாட்டு மக்கள் மூன்றாம் ஹென்றி காலத்தில்தான் பார்த்தனர். 'ஜம்போ' என்ற அந்த யானை பிரான்சு நாட்டு மன்னரால் பரிசுப் பொருளாக கொடுக்கப்பட்டதாகும்.

☐ முதன் முதலில் நில நடுக்கம் 1897 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் தேதி அசாமில் ஏற்பட்டதுதான். இந்த நில நடுக்கத்தால் சுமார் இருபத்தி எட்டு லட்சம் சதுர கி.மீ. பரப்பு பாதிக்கப்பட்டது.

☐ புத்தர் தனது முதல் போதனையை செய்தது சாரநாத்தில் தான்.

☐ உலகின் முதல் பெண் தலைமை நீதிபதி திருமதி சைமன் ரோசஸ். பிரெஞ்சு உச்சநீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தார்.

☐ 1903 ஆம் ஆண்டிலேயே கடலூர் வீரபத்திர படையாச்சி என்பவர்தான் முதன் முதலாக மதுவிலக்கைப் பற்றிப் பாடல் எழுதியவர்.

☐ பேரறிஞர் ஏமசந்திரசூரி என்பவர் பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே முதன் முதலாக சுமார் பதினெட்டு நாடுகளில் மதுவிலக்கை அமல் நடத்தும்படி செய்தார்.

☐ காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் பொய்கை ஆழ்வார். இவரால் அந்தாதியாகப் பாடப்பட்ட நூறு பாடல்களும் முதல் திருவந்தாதி என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. முதலில் திருமாலின் பத்து அவதாரங்களையும் பாடியவர் இவரே.

☐ பிரிட்டன் விமானப்படையைச் சேர்ந்த அதி நவீன போர் விமானங்களை ஓட்டும் முதல் பெண் விமானி-காக்ஸ். இவரது வயது 29. கிழக்கு இங்கிலாந்

தில் சஃபோல்க்கிலுள்ள 'இப்ஸ்விச்' என்ற இடத்தைச் சேர்ந்தவர். பள்ளியில் படிக்கும் போதே இவரது விமானப்பணி தொடங்கி விட்டது. முதலில் ஒரு பாரசூட்டிஸ்ட்டாக-அதாவது விமானப்படை விமானங்களிலிருந்து குதிப்பதற்குப் பழகிக் கொண்டார். அறுபது தடவைக்கு மேல் இவர் பாரசூட்டிலிருந்து குதித்திருக்கிறார்.

☐ அமெரிக்காவில் தலைமை வக்கீலாக முதன் முறையாக ஜோ பெயர்டு என்ற பெண் நியமிக்கப் பட்டு இருக்கிறார். ஆண்டு 1992.

☐ உலகத்திலேயே சினிமா நடிகராக இருந்து முதன் முதலாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவி ஏற்றவர்எம். ஜி. இராமச்சந்திரன் தான்.

☐ உலகத்திலேயே முதன் முதலாக சினிமா நடிகராக இருந்து அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவி ஏற்றவர் ரீகன்தான்.

17542

24A
10-100

எமது புதிய வெளியீடுகள்

கௌரி ராஜன்	
அவள் கண்ணகி தான்	16-00
மெர்வின்	
நல்ல நண்பன் வாழ்வின் துணைவன்	6.50
சுலபமாய் தேர்வில் வெற்றி பெறலாம்	7.50
மாவீரன் நெப்போலியன்	11 00
சேமிப்பு வாழ்வின் பாதுகாப்பு	6.50
கணவன் வீடு செல்லும் கன்னியருக்கு	10.00
உலக மகா கவிஞர்கள்	10 00
சமாதான சான்றோர்கள்	10.50
வி. எஸ். வெங்கடேசன்	
ப்ளாஸ்டிக் தொழில்கள்	7.50
மிழலைத் தொண்டன்	
எளிய நடையில் கந்தபுராணம்	25.00
வைரம். ராஜகோபால்	
முருகன் பெருமை	8.50
பாலாஜி	
நாற்பது வயதில் தாம்பத்ய வாழ்க்கை	7 50
உதயணன்	
பாண்டிய முரசு (சரித்திர நாவல்)	60.00
பாபநாசம் குறள் பித்தன்	
காட்டிலே தேர்தல் (சிறுவர் நாவல்)	7.50
~~சிலம்பச் சிற்பிகள் (சிலம்பக் கலைபற்றி...~~ விளக்கும் நூல்)	9.00
விஞ்ஞான கண்டுபிடிப்புகள் - மெர்வின்	13.00
அன்பே வெல்லும் - கவிதன்	9.00
சுவையான சிற்றுண்டி வகைகள் - அபுரூபம்மாள்	11.00
அக்கினிச் சாரல் - எஸ்.வி.ரமணி	55.00

முருகன் பதிப்பகம்